Registered No. M. 2330.

"SIDDHANTHAM"
Vol. 5—No. 11.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

12 NOV

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

| மலர் ரு | ஆங்கீரச ஆண்டு கார்த்திகைத் திங்கள்<br>1932 ஹ நவம்பர்மீ | இதழ் கக |
|---|---|---|

உள்ளுறை

| | பக்கம் |
|---|---|
| சடையன் விடையன் ... ... ... | உகரு |
| திருநெல் வெண்ணெய் சாசனம் ... ... | உசுஅ |
| சிவஞானபோத விளக்கம் ... ... | உகக |
| சொற்பொழிவுக் குறிப்புகள் ... ... | உஎஅ |
| உமாபதிசிவனார் திரட்டியருளிய அருள்முறைத்திரட்டு உரை ... ... ... | உஅக |
| திருவாசகம் உரையுடன் ... | கக௩ - கஉஅ |

ஆசிரியர் :—ம. பாலசுப்ரஹ்மண்ய முதலியார், B. A., B. L.
உதவி ஆசிரியர் :—திரு. வி. உலகநாத முதலியார்

சைவ சித்தாந்த மகாசமாஜம்,
150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை.

[illegible] ரூ. 2-0-0. 1932 வெளி நாட்டுக்கு ரூ. 2-8-0.
தனிப் பிரதி அணா 4.

# திருஞானசம்பந்த சுவாமிகள் புதிய திருப்பதிகம்

திண்டிவனம் ரயில்வே ஸ்டேஷனுக்கு 11-வது மைல் புதுவை மார்க்கத்தில் கிளியனூர் (Kiliyanur) என்ற க்ஷேத்திரமிருக்கிறது. இதைக் கிளியன்னவூர் என்று உச்சரிக்க வேண்டும். இந்த க்ஷேத்திரத்தில் சுகர், அகஸ்தியர், ஆதிசேஷன் பூசித்தனர். சுவாமி திருநாமம் அகத்தீஸ்வரர். தேவி திருநாமம் அகிலாண்டேஸ்வரி. இந்த க்ஷேத்திரத்தில் திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம் பாடி இருக்கிறார். அப்பதிகங்கள் புத்தில் சென்றுவிட்டதாகத் தெரிகிறது. அவைகள் சுகர் நாடி கிரந்தத்திலிருந்து அச்சிறுபாக்கத்துக்கடுத்த கயப்பாக்கம் கோயில் குருக்களும் போஸ்ட்மாஸ்டருமாகிய ம-ா-ா-ஸ்ரீ துரைசாமி குருக்களால் அடியேனுக்குக் கிடைத்தன. அவைகள் பின் வருமாறு :—

## திருக்கிளியன்னவூர்

### பண் - கௌசிகம்

### திருச்சிற்றம்பலம்

தார்சிறக்குஞ் சடைக்கனி வள்ளலின்
சீர்சிறக்குந் திணைப்பத முன்னுவோர்
பேர்சிறக்கும் பெருமொழி யுய்வகை
யோர்சிறக்குங் கிளியன்ன வூரனே. ௧

வன்மைசெய்யும் வறுமைவந் தாலுமே
தன்மையில்லவர் சார்பிருந் தாலுமே
புன்மைகன்னியர் பூசலுற் றாலுமே
நன்மையுற்றக் கிளியன்ன வூரனே. ௨

பன்னிநின்ற பனுவ லகத்தியன்
உன்னிநின்று வுறுத்தஞ் சகத்தவன்
மன்னிநாக முகத்தவ ரோதலும்
முன்னில்நின்ற கிளியன்ன வூரனே. ௩

அன்பர்வேண்டு மவையளி சோதியான்
வன்பர்நெஞ்சில் மருவவில் லாமுதல்
துன்பந்தீர்த்து சுகங்கொடு கண்ணுதல்
இன்பந்தேக்குங் கிளியன்ன வூரனே. ௪

செய்யும்வண்ணஞ் சிரித்துப் புரமதை
பெய்யும்வண்ணப் பெருந்தகை யாண்டோர்
உய்யும்வண்ணமிங் குன்னருள் நோக்கிட
மெய்யும்வண்ணக் கிளியன்ன வூரனே. ௫

எண்பெருவினைக் கேதுசெய் தின்னருள்
நண்புறுப்பவ மிற்றிட லன்னெறி
மண்பொருமுழுச் செல்வமு மல்குமால்
புண்பொருதக் கிளியன்ன வூரனே. ௬

மூவராயினு முக்கண்ண நின்னருள்
மேவுராது விலக்கிடற் பாலரோ
தாவுராதுன தைந்தெழுத் துன்னிடத்
தேவராகுங் கிளியன்ன வூரனே. ௭

திரமிகுத்த சடைமுடி(யான் வரை)
வரமிகுத்த இராவணன் கீண்டலும்
நிரமிகுத்து நெரிந்தவ னோதலால்
வரமிகுத்த கிளியன்ன வூரனே. ௮

நீதியுற்றிடு நான்முகன் நாரணன்
பேதமுற்று பிரிந்தழ லாய்நிமிர்
நாதனுற்றன நன்மலர் பாயிருக்
கீதமேற்ற கிளியன்ன வூரனே. ௯

மங்கையர்க்கர சோடு குலச்சிறை
பொங்கழற்சுர போக்கெனப் பூழியன்
சங்கைமாற்றி சமணரைத் தாத்தவு
மிங்குரைத்த கிளியன்ன வூரனே. ௧௦

நிரையவாழ்கிளி யன்னவூ ரீசனை
உரையுஞ்ஞானசம் பந்தன்சொல் சீரினை
அரையநின்றன பத்தும் வல்லார்க்குமே
குறையிலாது கொடுமை தவிர்வரே. ௧௧

திருச்சிற்றம்பலம்

இங்ஙனம் :

P. ஜானகிராம முதலியார், B. A.,

*Inspector of Post Offices, Chingleput.*

---

## மெய்கண்டார் திருநாள்

இது, திருவெண்ணெய் நல்லூரில் மெய்கண்டார் சந்நிதியில் முறையாகக் கொண்டாடப்பட்டது. திரு. கா. சுப்பிரமணிய பிள்ளையவர்களியற்றி, திரு. எம். சின்னசாமி செட்டியார் அவர்கள் பொருளுதவியைக்கொண்டு அச்சிட்ட "மெய்கண்டாரும் சிவஞானபோதமும்" என்ற ஆராய்ச்சி நூல், சமாஜ வெளியீடாக மெய்கண்டார் திருவடியில் சமர்ப்பிக்கப்பட்டது. பின்னர் திரு. சின்னசாமி செட்டியார் அவர்கள் இல்லத்தில் சமாஜப் பெருங்கூட்டம் ஒன்று நடந்தது. திருவாளர்கள் ம. பாலசுப்பிரமணிய முதலியார், கி. குப்புசாமி முதலியார், சிவ சிதம்பர செட்டியார், தி. கு. கி. நாராயணசாமி நாயுடு என்ற சமாஜத்தொண்டர்கள் மெய்கண்டார் சரிதை, சிவஞானபோதசாரம் முதலியவற்றை விளக்கினார்கள். இரவு பத்தரைமணிக்கு மங்கல வாழ்த்து முதலியவற்றுடன் சபை கலைந்தது. "மெய்கண்டாரும் சிவஞான போதமும்" என்ற நூல் 1962ஆ டிசம்பர் 10உக்குப் பிறகுதான் விற்கப்படும்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

"ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணியை உள்நாடு"

NOV 1932

| மலர் ரு | ஆங்கீரச ஆண்டு கார்த்திகைத் திங்கள்<br>1932 ஹு நவம்பர்மீ | இதழ் கக |
|---|---|---|

## சடையன் விடையன்

[பத்திராசிரியர்]

[இது பலவான்குடி ஸ்ரீ மணிவாசக சங்கத்தின் ௨௨-ம் ஆண்டு நிறைவிழாவில் 12-9-32ல் சைவத் திருவாளர் பண்டிதமணி - மு. கதிரேசச் செட்டியார் அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவைத் தழுவி எழுதப்பட்டது.]

முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானை உள்ளக் கனிவோடு வாழ்த்தி வணங்கும் திருப்பாடல்கள் பலவற்றில் இறைவன் சடையனாகவும் விடையனாகவும் விளங்குகின்ற தன்மை விதந்தோதப்பட்டிருக்கிறது. சடையன் பிறையன்....விடையன், சடையானைச் சந்திரனோடு....விடையானை, சடையானைத் தண்மலரான் சிரமேந்திய விடையானை, சடையன் பிறையன்.... விடையன், சடையா யெனுமால்....விடையா யெனுமால் (இவை சம்பந்தர் தேவாரம்), சடையனைச் சரிகோவண....விடையனை, சடையானே சடையிடையே....விடையானே, சடையுடையான்....விடை யுடையான் (இவை அப்பர் தேவாரம்), விடையுங் கொடியுஞ் சடையுமுடையாய், விடையின் மேல் வருவானை....சடையிற் கங்கை தரித்தானை (இவை சுந்தரர் தேவாரம்), சடையானே தழலாட....விடையானே, வெள்ளந்தாழ்விரி சடையாய் விடையாய் (இவை திருவாசகம்) என்பன போன்ற சொற்றொடர்களும் திருவாக்குக்களும் பன்னிரு திருமுறைகளில் மலிந்துள்ளன. சடையன் விடையன் என்ற சொற்கள் இவ்வாக்குக்களில் கேவலம் எதுகைக்காகவும் இறைவன் திருவுருவ வர்ணனைக்காகவும் மட்டும் ஆளப்பட்டுள்ளன வென்று சொல்வதற்கிட-

மில்லை. சைவ சித்தாந்தத்திற்கு அடிப்படையான ஒரு சிறந்த கொள்கை இச்சொற் பிரயோகத்தில் பொற்சுரையின் கண் மாணிக்கம் திகழ்வதைப் போல் மிளிர்கின்றது. இதை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஒரு மேஜையின் மேல் ஒரு புத்தகம் இருக்கிறது. புத்தகத்துக்கு மேஜை ஆதாரமாகவுள்ளது. மேஜையின்றேல் புத்தகம் கீழே விழும். புத்தகம் மேஜையினுடைய ஆதாரத்தைப் பெற்றிருக்கிறது. இந்த நிலையில் மேஜைக்கு ஆதாரப் பொருள் என்றும், புத்தகத்துக்கு ஆதேயப் பொருள் என்றும் பெயர். இஃதேபோல் தொன்னையில் நெய்யிருந்தால், தொன்னை ஆதாரப் பொருள்; நெய் ஆதேயப் பொருள். இறைவன் சடையில் கங்கையும் திங்களும் இருத்தலால், சடை ஆதாரப்பொருள்; கங்கையும் திங்களும் ஆதேயப் பொருள்கள். விடையின்மீது இறைவன் இருத்தலால் விடை ஆதாரப்பொருள், இறைவன் ஆதேயப் பொருள். கங்கைக்கும் திங்களுக்கும் ஆதாரமாகிய சடைக்கு இறைவனே ஆதாரமாகையால் அவைகட்குப் பரம ஆதாரப்பொருளாக இறைவன் விளங்குகிறான். அவ்வாறே உலகத்தை ஆதாரமாகவுடைய விடை உலகத்துக்கு ஆதேயப்பொருளாகின்றது. விடையை ஊர்தியாகவுடைய இறைவன் உலகத்துக்குப் பரம ஆதேயப் பொருளாகின்றான். எனவே, இறைவன் பரம ஆதாரப் பொருளாகவும் பரம ஆதேயப் பொருளாகவும் விளங்குகிறான் என்ற உண்மை பெறப்படும்.

இந்த உண்மைதான் மற்றொரு வகையாகவும் கூறப்படுகின்றது. உலகத்துக்கும் உயிர்கட்கும் அப்பாலுக்கப்பாலாய் நின்று அவைகட்காதாரமாய் இறைவன் விளங்கும் தன்மை "இருநிலனும் விசும்பும் விண்ணும் எழுலகும் கடந்து அண்டத்து அப்பால் நின்ற பேரொளியை" என்பது போன்ற திருவாக்குக்களாலும், உலகத்துக்கும் உயிர்கட்கும் உள்ளே நின்று அவைகட்காதேயமாய் இறைவன் விளங்கும் தன்மை "விறகிற்றீயினன் பாலிற்படு நெய்போல், மறைய நின்றுளன் மாமணிச்சோதியான்" என்பது போன்ற திருவாக்குக்களாலும் இனிது விளங்கும். இவ்வுண்மையையே மேல் நாட்டுத் தத்துவ நிபுணர்கள் the doctrines of transcendence and immanence என்று கூறுகிறார்கள்.

இனி, சடையன் விடையன் என்ற சொற்களிலுள்ள வேறு சில நுட்பங்களை ஆராய்வாம். இறைவனது சடையிலுள்ளவை கங்கையும் திங்களும். இவைகளை இறைவன் சடையில் வைத்துள்ள பெருமை நோக்கற்பாலது. கங்கை உமாதேவியாரின் கைவிரல் வியர்வையாகத் தோன்றிப் பெருவெள்ளமாகி அண்டங்களையழிக்கத் தலைப்படவும், அரியயனாதிதேவர்கள் வேண்டவும், சிவபெருமான் தனது சடையில் அதை ஏற்றுக் கங்கையின் ஆற்றலை யொடுக்கினார் என்பது சிவபராக்கிரமம் கங்காதரமூர்த்தி வரலாற்று லறியலாகும். இதிலிருந்து இறைவனது அளவிலாற்றலும், அவன் உலகத்தின் மீது வைத்துள்ள பெருங்கருணையும் விளங்கும். தக்ஷனது சாபத்தால் கலைகள் பதினைந்தும் குறையப்பெற்ற சந்திரன், இறைவன் கருணையை நாட, இறைவன் அருள் கூர்ந்து எஞ்சியுள்ள ஒரு கலையோடு நின்ற சந்திரனைத் தனது சடையி லணிந்து மீண்டும் கலைகள் வளரவும் தேயவும் இருக்குமாறு பணித்த செய்தி

187/69



சிவபராக்கிரமம் சந்திரசேகரமூர்த்தி வரலாற்றாலறியலாகும். இதிலிருந்து இறைவன் அளவற்ற ஆற்றலுடையவனாயினும் அளவற்ற கருணையுமுடையவனாயுள்ள தன்மை புலப்படும். இஃதேபோல் தருமவிடை, ஆன்மவிடை, மால்விடை என்ற மூவகைப் பெற்றியுடைய விடையை இறைவன் ஊர்தியாகக்கொண்டு ஆதேயப் பொருளாகும் தன்மையும் நோக்கற்பாலதே. சிவபராக்கிரமத்துள் இடபாரூடமூர்த்தி வரலாற்றிலிருந்து விடை ஆதாரமாகவும் இறைவன் ஆதேயமாகவும் இருந்தபோதிலும் இறைவனது ஆற்றலும் பேரருளுமே விளங்குகின்றன.

இந்த நுட்பம் திருவாசகத்தில் நீத்தல் விண்ணப்ப முதற் செய்யுளில் மிக அழகு பெறக்கூறப்பட்டுள்ளது. ஆன்மாக்களுள்ளே ஆதேயப்பொருளாய் இறைவன் விளங்குவது "கடையவனேனைக் கருணையினாற் கலந்தாண்டு கொண்ட விடையவனே" என்பதிலிருந்தும், ஆன்மாக்களுக்கு ஆதாரபூதமாயும் இறைவன் கருணை கூர்ந்து விளங்கும் தன்மை அதே பாட்டில் ஈற்றடியில் "சடையவனே தளர்ந்தேன் எம்பிரான் என்னைத் தாங்கிக் கொள்ளே" என்பதிலிருந்தும் நன்கு புலப்படும். திருஞான சம்பந்தப் பெருமான் திருவாக்கிலும் ஓரிடத்தில் இதைக் காணலாகும். விஷந்தீண்டிய தனது நாயகனது பிரிவாற்றாமைக்கு வருந்தும் வணிகப் பெண்ணின் துயரை இறைவனுக்கு விண்ணப்பிக்கும் புகலிவேந்தர்,

"சடையா யெனுமால் சரண்நீ யெனுமால்
விடையா யெனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவளுள் மெலிவே"

என்கிறார்.

"ஆதாரப் பொருளாகிய சடையாய் என்னுங்கால் நீயே சரணம் என்னை ஆதரித்துக் காப்பாற்று என்பாள், ஆதேயப் பொருளாகிய விடையாய் என்றவுடன் அதற்கு ஆதாரமாகிய தனதான்மா நிலை கலங்கியிருத்தலால் அஞ்சி மருண்டுவீழ்வாள், குவளைக் கண்ணியாம் அருட்சக்தியை மருவி கருணை வெள்ளம் மடையிற் பாய்ந்தது போன்று திருமருகலில் வீற்றிருக்கும் இறைவனே இப்பெண் உள் மெலிந்து புழுங்குதல் நீதியோ" எனக்கூறிக் காழிப் பெருந்தகை இவ்வுண்மையை விளக்கியுள்ள சிறப்பை நோக்குக. இவ்வாறே ஏனைய பிரயோகங்களிலும் இந்நுட்பத்தை உய்த்துணரலாம். எனவே, சடையன் விடையன் என்ற சொல்லடுக்கில் சைவ சித்தாந்தத்தின் அடிப்படையான கடவுளின் தன்மை மிக அழகாகப் பொருந்தியிருக்கிறது. இதைப் போன்ற வேறு நுட்ப விடயங்களில் நமது நண்பர்கள் அடிக்கடி சிந்தையைச் செலுத்துவார்களாக.

# திருநெல் வெண்ணெய் சாசனம்

[தி. கு. கி. நாராயணசாமி]

குறிப்பு:—கீழ்க்காணும் சாசனம் நடுநாட்டுத் தலங்களில் ஒன்றாகிய திருநெல்வெண்ணெய் தலத்துக் கோயில் மண்டபத் தென் சுவரிலுள்ளது. இப்பட்டய மூலத்தை (380 of 1908) அரசாங்கத்தார் இன்னும் வெளியிடவில்லை. இச்சாசனம் இரண்டாம் குலோத்துங்கனுடையது. இதன் காலம் கி. பி. 1136. சிவஞான சித்தியார் ஆசிரியரான அருணந்தியார் பிறப்பிடம் திருத்துறையூர். அவ்வூர் பிடாரர் ஒருவர் வேண்டுகோட்கிணங்கி இந்த தானம் ஏற்பட்டது கவனிக்கத்தகுந்தது. சாசனவல்லுநர்க்கு வெட்டியுள்ள சிவாநந்த மகாமுனிகள் அருணந்தியார் பெயரோவென்ற ஐயப்பாடுமுண்டு. மற்றும் இதில் மலாடு, முனைப்பாடி, ஈசன் பெயர் தூய தமிழ் ஒலிபெற்றிருப்பது, அரசன் சைவத்தின்பாற் காட்டிய அன்பு, அவனது அரி அணை வர்ணனை முதலியன கவனிக்கத்தக்கன.

(1) ஸ்வஸ்தி ஸ்ரீ பூமெவி வளா திருப்பொந் மார்வு புணர நாமெவுகலை மகள் நலம் பெரிது சிறப்ப விசெய

(2) மாமகள் வெல்புயத்திருப்ப குடிசெயிந் செல்வி யெண்டிசெ விளங்க நிருபர் வந்திறைஞ்ச நிணில

(3) மடந்தை யெத்திருமணம் புணர்ந்து சீர்வளர்தரும் மணிமுடி கவித்தென மணிமுடி சூடிமல்

(4) லைஞாலத்துப் பல்லுயிற் கெல்லாமெல்லை யிலிங்பமியல பினிலெய்த வெண்குடை

(5) ட நிழற்றச் செங்கோலோச்சி செம் பொந் வீரஸிம்ஹாஸநத்துப் புவன முழுதுடையாய[ள]ா

(6) டும் விற்றிருந்தருளிய கோராஜகெஸரிபந்மரான சக்[கு]வத்திக[ள்] ஸ்ரீ குலோத்துங்க சே

(7) ா[ழ] தேவர்க்கு யாண்டு மூன்றாவது விக்கிரம சோழபுரத்துக் கோயில் வள்ளால் அபிஷேகம

(8) ண்டபத்து செம்பொன் வீரசிம்மாஸனத்து திருமுத்துப் பந்தலின் கீழ் எழுந்தருளி யிருந்து ெ

(9) சய்யத் திருவாய் மொழிந்தருளின்படி மலாடான ஜனநாத வளநாட்டு கூறுக்கை கூற்றத்து

(10) நெல்வெண்ணை பொற்குடம் குடுத்தருளிய மஹாதேவற்கு செல்லவேண்டு நிபந்தங்களுக்கு இறுப்

(11) பதாக ராஜராஜ வளநாட்டுத் திருமுனைப்பாடியான ராஜேந்திர சோழவளநாட்டு மாதா தேயங் குலோத்து

(12) ங்க சொழ சதுர்வேதி மங்கல நாடுங் கூடினபடியே வெற்றுக்கிற்றுநாட்டு இடையாற்று நாட்டுப்

(13) பணைப்பாக்கத்து நிலத்திலே பதிற்று வேலி நிலம் தேவதான இறையிலியாக யிட்டு கலிகடிந்த



(14) சோழ நல்லூரென்னும் திருநாமத்தால் வேறு பிரிக்கப் பெற வேண்டுமென்று திருத்துறையூர் பிடாரர்ஸி (15) வாநந்த மஹாமுனிகள் காட்ட இக்கோயில் சிவப்பிராமணன் சைவாசாரியன் (16) காசிபன் நம்பிகுமரன் அண்டநாயகன் நமக்குச் சொன்னமையில் இன்நா (17)ட்டு இடையாற்று நாட்டுபணைப் பாக்கத்து தேரிக்கு கிழக்கு இடையாற்றெல்லைக் * * * *

குறிப்பு:—இதன் தொடர்ச்சி மண்டப கிழக்குச் சுவரிலிருக்கிறது. இந்த இடம் இருள் சூழ்ந்த யிடமாதலின் படி எடுக்கப்படவில்லை.

# சிவஞானபோத விளக்கம்

[கி. குப்புச்சாமி முதலியார்]

## பன்னிரண்டாஞ் சூத்திரம்

மேல் பதினோராஞ் சூத்திரத்துள் ஜீவன் முத்தராவார் நீங்காத அன்போடு ஆண்டவன் திருவடியில் அறிவு இச்சை செயல்களைச் செலுத்துபவர் என்று கூறியவர், அந்த ஜீவன் முக்தர்க்கே அறிவு இச்சை செயல்கள் ஒருகால் புறத்துச் செல்லுமாயின், அம்மூன்று குணங்களும் செல்லுகின்ற இடம் இவை யென்பது உணர்த்தவேண்டியவர் வாக்கிற்கும், மனத்திற்கும் அப்பாற்பட்ட இறைவனைப் பத்தியினால் இதுகாறும் துதித்து வந்தது போலல்லாது, வாக்கு மனத்தாலும் நன்றாக உணருமாறு கண்டு வழிபடும் விதம் இதுவென்று அறிவுறுத்துவாராய் இப்பன்னிரண்டாஞ் சூத்திரத்துள்,

“செம்மலர் நோன்றாள் சேர லொட்டா
அம்மலங் கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரன்எனத் தொழுமே.”

என்று அருளினார். இதன் பொருளாவது, செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா - (நீங்காத அன்போடு ஆண்டவன் திருவடியை அடைந்த ஜீவன் முக்தனாவான்) சிவந்த தாமரை போன்று விரிந்து காணப்பட்ட முதல்வனது பிறவிப் பிணிக்கு மருந்தாகிய நல்ல திருவடிகளைச் சேரவொட்டாது அயர் வினை யுண்டாக்கும், அம்மலங்கழீஇ - இயற்கையினையுடைய ஆணவம் கன்மம் மாயை ஆகிய மும்மல அழுக்கினை ஞான நீரால் கழுவி, அன்பரொடு மரீஇ - அவ்விதம் தம் போன்றே நீங்காத அன்பு செய்யும் மெய்ஞ்ஞானிகளுடன் கலந்து கூடி, மாலற நேயம் மலிந்தவர் வேடமும் - மல மயக்கம் நீங்குதலால் மிக்க அன்புடைய அவரது திருவேடத்தையும், ஆலயந்தானும் - சிவாலயத்தையும், அரனென - முதல்வனென்றே கண்டு, தொழும் - வழிபட்டு வாழ்வன் என்பதாம்.

இதில் ‘அம்மலம் கழீஇ’ என்று கூறியதால் அறிவு செல்லுமிடமும், ‘அன்பரொடு மரீஇ’ என்றதால் இச்சை செல்லுமிடமும், ‘தொழும்’ என்றதால் செயல் செல்லுமிடமும் கண்டோம். ஆதலால், சீவன் முத்தர்க்கு இம்

மூன்று குணங்களும் புறத்துச் செல்லுமாயினும், ஏனைய உலக அறிவில் செல்லாது என்பதுங் கண்டோம்.

இனி, ஜீவன் முத்தராவார், இறுதியாக முன்னர்ச் செய்ய வேண்டுவது இதுவென உணர்த்துவார், ஈண்டு "ஆணவம், மாயை, கான்மியம் என்னும் மலங்களைக் களைக" என்றனர். ஆயின் முன்னரே பத்தாஞ் சூத்திரத்துள் இறைபணியார்க்கு 'மலமாயை தன்னொடு வல்வினையின்றே' என்று கூறியிருத்தலால், பாச நீக்கம் அப்போதே ஒழிந்ததாயிற்று. அதன் பயனுக, மெய்யுணர்ந்து நிட்டை கூடிய பிறகு, அம்மும்மலங்களைக் களைக என்றது எவ்விதம் என்பாரை நோக்கி, 'அவைதாம் ஞானத்தை யுணர்த்தாது அஞ்ஞானத்தை யுணர்த்தும் ஆதலான்' என்றனர். அதாவது, அம்மலங்கள் மூன்றும் நிட்டை கூடினவரிடத்தும், ஏதேனும் ஒரு வழியால் நுழைந்து, அவர்களை மெய்யுணர்வைக் கீழ்ப்படுத்துப் பிறவிக்கு வித்தாகிய பழைய விபரீத உணர்வினை மேல் படுத்துவனவாதலால், அது அந்நிட்டை கூடினார்க்கு ஆகாது என்று மேற்கொண்டனர். அவ்விதம் அம்மும்மலங்களும் அஞ்ஞானத்துக்கு ஏதுவாய் வந்து நுழையும் விதமும், அது அஞ்ஞானிகளுக்கு ஆகாமையும் எடுத்துக் காட்டி ஏதுவை வலியுறுத்துவார்,

"புண்ணிய பாவம் பொருந்துமிக் கான்மியமு
மண்முதன் மாயைகாண் மாயையுங்—கண்ணிய
வஞ்ஞானங் காட்டுமிவ் வாணவமு மிம்மூன்று
மெய்ஞ்ஞானிக் காகா விடு."

என்று கூறினர். இதன் பொருளாவது, புண்ணிய பாவங்களை யுண்டாக்கும் விருப்பு வெறுப்புகளாகிப் பொருந்துகின்ற இந்தக் கன்மமலமும், மண் முதல் மாயா தத்துவம் கடைசியாகக் காணப்படுகின்ற இந்த மாயா மலமும், சுட்டியறியக்கூடியதாகிய விபரீத உணர்வினை யுண்டாக்கும் இந்த ஆணவ மலமும் என்று சொல்லப்படுகின்ற மூன்று மலங்களும் மெய்ஞ்ஞானிகளுக்கு ஆகாதனவாதலால், இம்மூன்று மலங்களையும் விட்டு ஒழிவாயாக என்பதாம். ஏனெனில் மேற்கூறிய வண்ணம் எல்லா மதங்களும் பற்றறும்படி துடைத்து அதற்கு வேறாகிய ஞானத்தை யடைந்தார்க்கும் உடம்பு உள்ள அளவும் பிராரத்த வினையானது அவ்வுடம்போடு கூடி நிற்றலால், அவ்வினை அம் மெய்ஞ்ஞானியர்க்கும் ஒரோரிடத்துப் பழக்க மிகுதியால் இங்குளி என்னும் பெருங்காயம் இருந்த குடுக்கையானது அப்பெருங்காயம் நீங்கிய விடத்தும், அதன் வாசனை விட்டு நீங்காதது போல் வந்து தாக்கி, அதன் சார்பாக அவ்விருப்பு விருப்பு வெறுப்புக்கள் என்கின்ற இரண்டனையும் உண்டாக்கும். அவ்விருப்பு வெறுப்புகளாகிய இரண்டும் உண்டாகியவிடத்து மெய்ஞ்ஞானத்தால் சிவத்தையே பார்த்திருப்பார்க்கு நிலம் முதல் மாயை ஈறாகிய பொருள்கள் வந்து தோன்றும். அவ்விதம் அவை தோன்றவே அவற்றைச் சுட்டியறிவதாகிய விபரீத வுணர்ச்சி மேற்பட்டதாகி மெய்யுணர்வினைக் கீழ்ப்படுத்திப் பிறவிக்கு வித்தாகி விடும். இவ்விதம் மூன்று மலங்களும் அறிவின் குறைவு கண்டு, மேற் சொல்லிய முறையானே வந்து தலைப்படுமென்றனர். இம் மூன்று மலங்களும் சிவயோகப் பெருவாழ்வை யடையவொட்டாது செய்வன



வாதலால் 'மெய்ஞ்ஞானிக்கு ஆகா' என்றனர். அன்றியும் இவற்றைத் தோன்றும்பொழுதே துடையாவிடில்,

"இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த விடத்து."

என்றபடி, பின்னர் தீங்கு விளைக்கும் என்பார், 'விடு' என்றூர். ஆயின், மூன்று மலங்களும் அஞ்ஞானத்தை யுணர்த்து மென்று கூறிய இவர், இவ்விடத்து ஆணவமல மொன்றே அஞ்ஞானங் காட்டும் என்பது பொருந்தாது என்பார்க்குக் கூறுவதுபோல், அவ்வஞ்ஞானத்தைக் காட்டுதல் மாயை கன்மம் ஆகிய மலங்களுக்கும், ஆணவமலச் சார்பாகிய செயற்கை யறிவேயன்றி இயற்கை யறிவன்று. ஆனல் ஆணவமலத்துக்கோ அவ் வஞ்ஞானத்தை யுணர்த்துதல் இயற்கை யாகும் என்னும் அறிவினைப் புகட்டுவார், முதலில் கூறுமிடத்துப் பொதுவாகவும், பின்னர் கூறுமிடத்துச் சிறப்பாகவும் கூறினர்.

இனி, மேல் கூறியபடி மூன்று மலங்களையும் அறவே களைந்தார்க்கு அதன் பின்னர் செய்யக் கடவது இது என்று உணர்த்துவார்,

"இனிச் சிவபத்தர்களோடு இணங்குக"

என்றனர். அதாவது, முதல்வனைப் பத்தியினுல் ஒருபோதும் மறவாது துதித்து அவனது திருவடியையடைந்தபெரியாரோடு நட்புச்செய்தல்வேண்டுமென்றும், அவரல்லாத மற்றையரோடு நட்புச்செய்த லாகாதென்றும் அறிந்தோம். உறவென்பதும், பகையென்பதும் ஒழித்து எல்லா உயிர்களையும் தம்மகவெனப் பார்க்கும் செல்வக் கடவுள் தொண்டர்க்கு இவ்விதம் சிலரிடத்து விருப்பும், சிலரிடத்து வெறுப்பும் செய்துகொண்டு வேறுபட்டு நிற்றல் சால்புடைமை யாகுமோ என்னும் ஐயத்தை நீக்குவதற்கு,

"அல்லாதார் அஞ்ஞானத்தை உணர்த்துவ ராகலான்"

என்றனர். அல்லாதார் எவ்விதம் அஞ்ஞானத்தை யுணர்த்துவர் என்பதை யறிந்துகொள்வதற்கு,

"தெய்வ மென்பதோர் சித்த முண்டாகி
முனிவி லாததோர் பொருளது கருதலும்
ஆறு கோடி மாயா சத்திகள்
வேறு வேறுதம் மாயைகள் தொடங்கின
ஆத்த மானர் அயலவர் கூடி
நாத்திகம் பேசி நாத்தழும் பேறினர்
சுற்ற மென்னுந் தொல்பசுக் குழாங்கள்
பற்றி யழைத்துப் பதறினர் பெருகவும்
விரத மேபர மாக வேதியரும்
சரத மாகவே சாத்திரங் காட்டினர்
சமயவாதிகள் தத்தம் மதங்களே
அமைவ தாக அரற்றி மலைந்தனர்."

என்னும் இன்னுழக்கே போதும். அன்றியும், மூன்று மலங்களும் ஒரு உயிர்க்கு அஞ்ஞானத்தை யுணர்த்துதல் இல்க்கு வாய்த்த இடத்தி லாகும்,

அவ்வாறு அல்லாது இலக்கு வாயாத இடத்தும் வாய்க்கும் விதம் செய்து கொண்டு தம்மைப்போன்று ஆகும் வண்ணம் விபரீத உணர்வி னிடத்தே செல்லும்படி செலுத்திவிடுவா ராதலால் சிவபத்தி யில்லாத அஞ்ஞானிகள் இம் மும்மலங்களினுங் கொடியராவர். அஞ்ஞானிகளாகிய அவர்களை அம்மும் மலங்களுக்கு அஞ்சுவதைக் காட்டிலும் அதிகமாக அஞ்சி அவரை விட்டு ஒழிதலே அறிவுடைமைக்குத் தகுதி யென்பதாம். ஆயின் சிவபத்தியில் லாதாரோடு இணங்காது இருத்தல் ஒன்றே யமையுமே, சிவபத்தர்களோடு இணங்கவேண்டு மென்பது எதற்கு என்னும் ஐயத்தை நீக்கித் தாம் எடுத்துக்கொண்ட எதுவை வலியுறுத்துவார்,

“மறப்பித்துத் தம்மை மலங்களின் வீழ்க்குஞ்
சிறப்பிலார் தந்திறத்துச் சேர்வை—யறப்பித்துப்
பத்த ரினத்தாய்ப் பரனுணர்வி னாலுணரு
மெய்த் தவரை மேவா வினை.”

என்று கூறினார். இதன் பொருளாவது, மும்மலங்களும் நீங்கிய முதல்வன் காட்டியும், கண்டும் உபகரித்து நிற்கும் அத்துவித நிலையை மறவாது கடைப்பிடித்துத் தமது ஞானநிலையை இழுக்கச் செய்து தீயநெறிக்கண் கொண்டு சென்று மலங்களா லாகிய பிறவிக் குழியில் வீழ்வித்துத் துயரஞ் செய்பவ ராகிய அன்பிலாரோடு தொன்றுதொட்டுப் பழகிவந்த கூட்டுறவு அறும்படி, அம்மறப்பினை மாற்றி ஞானக் கண்ணினை உதவிப் பிறவிக் குழியி னின்றும் எடுத்து நன்னெறியில் செலுத்தி வாழச் செய்யும் சிவபத்தரது கூற்றிலே பேரன் புடையராய் அவ்வன்பு சார்பாக விளங்கும் சிவஞானக் கண்ணால் அந் நிலையைக் கடைப்பிடித்து உணரப்பட்ட மெய்த்தவசிக ளாயினாரை எல்லா அநந்தங்களுக்கும் மூலமாய் வந்து தோன்றிச் சிவபத்த ரல்லாதாரது கூட்டுறவைப் பயப்பிக்கும் பிராரத்த வினைகள் வாதியாவாம் என்பதாம்.

எனவே, வீட்டுணர்வு ஈதென்று நிலைநாட்டும் சிவபத்தர்களோடு கூடினா லல்லாமல், வினை பற்றுக்கோடாகப் பிறவிகள்தோறும் பழகிவந்த சிறப் பில்லா ராகிய அஞ்ஞானிகளது கூட்டுறவு நீங்காமையின், அச் சிவபத்தர்க ளது கூட்டுறவு உண்மையாகவே வேண்டும் என்பதாம்.

இனி, இவ்வாறு அன்பரொடு கூடினார்க்கு அக்கூடலை நிலை பெறுத்துவ தாகச் செய்யக் கடவது இது என்று காட்டுவார், ‘இனிப் பத்தரது திரு வேடத்தையுஞ் சிவாலயத்தையும் பரமேசுவர னெனக் கண்டு வழிபடுக என்றது.’

[redacted]னெனில், ஆடல் பாடல் அழகு ஆகிய மூன்றையும் கருவிக ளாகக் கொண்டு உள்ள காமக்கிழத்தியர் வடிவிற் காணப்படும் ஆடை சாந்து அணிகலன் முதலாயின அவரை விரும்பும் காமுகரை வசீகரப்படுத்தி இன்பஞ் செய்வதுபோல, மெய்யுணர் வுடையாரைக் காட்சி மாத்திரையில் வசீகரித்து இன்பத்தை யுண்டுபண்ணுதல்பற்றிப் பத்தரது திருவேடத்தை யும், சிவாலயத்தையும் என்று உபகரித்தனர். இவ்வுவமையை,



“சேலும் கயலும் திளைக்கும் கண்ணார் கொங்கையிற் செங்குங்குமம்
போலும் பொடியணி மார்பு இலங்கு மென்று புண்ணியர் போற்றிசைப்ப”.

என்னும் சேந்தனார் திருப்பல்லாண்டினும் காணுதல்கூடும். மேலும் திரு வேடத்தின் இயல்பு இதுவென உணர வேண்டின்,

“ தூய வெண்ணீறு துதைந்த பொன்மேனியும் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவரு சிந்தையு நைந்துருகிப்
பாய்வது போலன்பு நீர்பொழி கண்ணும் பதிகச்செஞ்சொல்
மேய செவ்வாயு முடையார் புகுந்தனர் வீதியுள்ளே.”

“சிந்தை யிடையறா வன்புந் திருமேனிதனி லசைவுங்
கந்தை மிகையாங் கருத்துங் கையுழவாரப் படையும்
வந்திழி கண்ணீர் மழையும் வடிவுபொலி திருநீறு
மந்தமிலாத் திருவேடத் தரசு மெதிர்வந் தணைய.”

“கண்டக வுணியக் கன்றுங் கருத்திற்பரவு மெய்க்காதற்
றொண்டர் திருவேடநேரே தோன்றிய தென்று தொழுதே.”

என்னும் பெரியபுராணத் திருச் செய்யுள்களாலும் அறிதல் கூடும்.

இது கேட்ட வாதிகள், மெய்யுணர்வினை யுடையார்க்கு, பிரிப்பு இன்றி எவ்விடத்தும் பரமேசுவரன் என்று காண்டலே பொருத்த முடைமையாக இருக்கவும், திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய நின்ற திருத்தாண்டகத்துள்,

“இரு நிலனாய்த் தீயாகி”

என்று எங்கும் சிவபெருமான் எழுந்தருளி யிருப்பவன் என்பதனாலும், திரு வுருத்தரத்துள் திருவென்பது இல்லாமல், உயிருடைய பொருள், உயிரில் லாப் பொருள் எவையுந் தனித் தனியாக எடுத்து ஓதி வழிபாடு கூறுதலா லும், பத்தரது திருவேடத்தையும், சிவாலயத்தையும் பரமேசுரன் என்று கண்டு வழிபடுக என்று பிரித்துக் கூறியது பொருந்தாது போலும் என்பா ரது ஐயத்தை நீக்குவதற்கு, ‘அவன் மற்றிவ்விடங்களில் பிரகாசமாய் நின்றே அல்லாத இடத்து அப்பிரகாசமாய் நிற்றலான்’ என்றனர். அதாவது அம் முதல்வன் எவ்விடத்தும் வியாபகமாய் நிற்பனாயினும் மேற்கூறிய இவ்விரண் டிடங்களில் மாத்திரம் தயிரில் நெய்போன்று நின்று நிலைபெற்று மற்ற இடங் களில் பாலில் நெய்போல வெளிப்படாது நிற்பன் என்பதாம்.

இனி, இவ்விரண்டிடத்தும் பிரகாசமாய் நிற்கும் விதமும், மற்றைய இடங்களில் அப்பிரகாசமாய் நிற்கும் விதமும் எடுத்துக் காட்டுவார்,

“தன்னுணர வேண்டித் தனதுருவைத் தான்கொடுத்துத்
தன்னுணரத் தன்னு ளிருத்தலாற்—றன்னுணரு
நேசத்தர் தம்பால் நிகழுந் ததிநெய்போற்
பாசத்தார்க் கின்றாம் பதி”

என்று கூறினார். இதன் பொருளாவது, சிந்திப்பதற்கு இல்லாதவனாய, பரம் பொருளே உலகத்துள்ள ஆன்மாக்கள் தன்னை யறியும்பொருட்டு, திருநீறு கண்டிகை முதலிய திருவேடமாகிய தனது திருவடிவத்தைத் தனது அன்

பர்க்குக் கொடுத்தலாலும், அவ்வன்பர் தமது சிவோகம் பாவனையாலும் அறியச் செய்தலாலும், அவ்விதம் ஒரு குறியின் கண்ணின்று உணரும் அவ்வன்பரைத் தனது வியாபகத்துள் இருக்க இருத்துதலானும், குறியும் இறந்து நின்று தன்னையுள்ளவாறு உணரும் அவ்வன்பரிடத்துத் தயிரிடத்துக் காணப்படும் நெய்போல விளங்கித் தோன்றும். மேற்கூறிய தகுதியெல்லாம் இல்லாத பாசக்கட்டு உடையாராகிய ஆன்மாக்களிடத்துப் பாலினிடத்தே மறைந்து நிற்கும் நெய்போல விளங்காது நிற்கும் என்பதாம்.

இதுகேட்டார், சங்கம வடிவிற்குச் சொல்லிய இயல்பெலாம் இல்லாத தாவர வடிவில் மந்திர சாந்நித்யம் உள்ள இடத்தல்லாமல் பிரகாசமாய் நிற்றல் கூடாது என்னலும், அவரை நோக்கிச் சிவாலயத்தினிடத்தும் இறைவன் பிரகாசமாய் நிற்றலை வலியுறுத்துவார்,

“ கண்டதொரு மந்திரத்தாற் காட்டத்தி லங்கிவே
றுண்டல்போல் நின்றங் குளதாமாற்—கண்டவுருத்
தானதுவா யன்றானன் தானதுவாய்த் தோன்றானே
தானதுவாய்க் காணுந் தவர்க்கு”

என்று கூறினார். இதன் பொருளாவது, விறகினிடத்தே யுள்ள தீயானது கடைகோலால் கடைந்த இடத்து அவ்விறகுக்கு வேறாய் விளங்கித் தோன்றும். அவ்விதமல்லாதவிடத்து விளங்கிக் காணப்படாததுபோல, உயிர்களுக்குப் புத்திமுத்தி யளித்தற்பொருட்டு தாவர வடிவினிடத்துக் கலப்பினால் அதுவே தானாகியும், அப்பொருளல்லாது வேறு பொருளாயும் ஆகின்ற இயல்பினையுடைய முதல்வன், அதுவே தானாகக் காணாதார்க்குத் தம்மால் அறியப்பட்டதொரு மந்திரசாந்நித்யம் இல்லாதவிடத்து, அவ் வடிவினிடத்து விளங்காது நின்றும், மந்திரசாந்நித்யம் உள்ள விடத்து விளங்கிக் காணப்படும் பொருளாம். அவ்விதமல்லாது, அவ்வடிவத்தையே அவனாகக் காணப்பெறும் உண்மைத்தவமுடையார்க்கு அப்பெற்றியனேயாய் விளங்கித் தோன்றுவன் என்பதாம்.

இவ்வுவமையினை, “விறகிற் றீயினன் பாலிற்படு நெய்போல், மறைய நின்றுளன் மாமணிச் சோதியான், உறவுகோல் நட்டு உணர்வு கயிற்றினால், முறுக வாங்கிக் கடையமுன் னிற்குமே” என்னுந் திருநாவுக்கரசர் திருவாக்காலும் அறிதல்கூடும்.

இனிமேல் மூன்று அதிகரணங்களால் ஜீவன் முத்தருக்குரிய ஆசாரம் உணர்த்தியவிடத்து, அவர்க்கே உண்டாவனவாகிய இலக்கணமாதலால், அநுவாத முகத்தால் ஓதாது “களைக”, “இணங்குக”, “வழிபடுக” என்று விதிமுகத்தால் ஓதுவது எதற்கு? என்னும் ஐயத்தை நீக்குவதற்கு எழுந்தது நான்காமதிகரணம் என அறிக. அதாவது, இவ்விடங்களின் வழிபடுக என்றமையால், இவ்விடங்களாவன:—பத்தரது திருவேடமும், சிவாலயமும் என மேற்கூறியனவாகும். ஏனெனில், நரம்பு நாடி முதலானவற்றைத் தானதுவாய் வரும் புருடன் அவையாகாவாறு, அப்புருடனு மாகலான் என்பதனால் என்க. அதாவது நரம்பு, நாடி, இறைச்சி, என்பு முதலியதாதுக்களினிடத்து வேற்றுமையில்லாமல், அது அதுதானாய் வருகின்ற உயிர்முன் இந் நூலில் கூறியபடி,

“ நாடியோ என்போ நரம்பு சீக்கோழையோ”,

என்று இவ்விதம் பைம்மறியாப் பார்ப்பார்க்கு, நரம்பு நாடி முதலியவையாகாது அவற்றின் வேறுமாயினாற்போல, உயிர்க்கு உயிராகிய அம்முதல்வனும் ஜடம், சித்துக்கள் என்னும் எல்லாப் பொருளினும், அது அதுதானாகியும் நிற்பன். ஆதலால், அது அது தானாகநிற்பதைக் காணும் காட்சிபற்றி, எய்திய வழிபாடானது, அது அது அல்லனாய் நிற்றலைக் காணுமிடத்து, வழிபாடு எய்தாமையின் அவ்விடத்தும் அடைவிக்க வேண்டுதலான், இனி இவ்விடங்களின் வழிபடுக என விதித்துக் கூறியதாகும். அவ்விதமாயும், முதல்வனுக்கு இவ்வியல்பு எல்லாப் பொருள்களிடத்தும் உண்டாதலால் எவ்விடத்தும் வழிபாடு விதித்தலே பொருத்தமுடையது என்னும் ஐயத்தை நீக்கி வலியுறுத்துவார்,

“ அதுவிது வென்ற ததுவல்லான் கண்டார்க்
கதுவிது வென்றதையு மல்லான்—பொதுவதனி
லத்துவித மாத லகண்டமுந் தைவமே
யத்துவிதி யன்பிற் றொழு”

என்று கூறினர். இதன் பொருளாவது, முதல்வன் உயிர்ப்பொருள், உயிரில் பொருள் என்கின்ற எல்லாவற்றினும் நிற்கும் நிலைமையினை யறியப் பெற்றோர்க்குக் கண் அருக்கன்போல, அதுவென்றும் இதுவென்றும் பிரித்துக் கூறப்பட்ட பேதநிலைமையனும் அல்லனாய், உடல் உயிர்போல் அதுவே யென்று ஓதப்பட்ட அபேதநிலைமையனும் அல்லனாய், குணமும் குணியும் போல் அதுவாகிய இது பிரிக்காது சொல்லப்பட்ட பேதாபேத நிலைமையனும் அல்லனாய், அறிவும் ஒளியும்போல், அம்மூன்றனுக்கும் பொதுமையால் அத்துவித நிலைமையன். ஆதலால், எல்லாப் பொருள்களும் அவன் வடிவேயாக இருக்கினும், அவற்றுள்ளும் அன்பு விளையுமிடத்து வழிபடுவாயாக; அவ்வத்துவித சித்தாந்தத்தை யுறுதியெனக் கொண்டவனே யென்பதாம்.

இனி, அசுத்தமாயுள்ள உலகப் பொருள்களை யசத்து என்று கண்டு, நீங்குவதாலேயே ஞானசொரூபம் உண்டாகி அத்துவித உண்மையினை யுணர்த்துவதாக இருக்க, அவ்வுண்மை யுணருவதற்கு வழிபாடுஎன்று வேறு விதித்தல் எதற்கோ? என்பாரை நோக்கி வழிபாடு வேண்டுமென்று வலியுறுத்துவார்,

“ வினையா லசத்து விளைதலான் ஞானம்
வினைதீரி னன்றி விளையா—வினைதீர
ஞானத்தை நாடித் தொழவே யதுநிகழு
மானத்தா லன்பிற் றொழு”

என்று கூறினர்.

இதன் பொருளாவது, உடம்பின் கண்ணேயுள்ள பிராரத்வ வாசனை [illegible] உடம்பைத் தாக்குதலால், அதனால் வரும் விருப்பு வெறுப்புக்களும்,

அதுபற்றிக் காட்சிப்படும் மண்முதல் மாயைகளும் அவைபற்றி யுண்டாகும் விபரீத உணர்வும் ஆகிய அசத்துக்கள், ஒருமுறை நீங்கிய இடத்தும் மறுபடியும் வந்து கூடித் தாமே மேம்பட்டு நிற்குமாதலால், இவற்றுக்கெல்லாம் மூலமாகிய பிராரத்வ வாசனைப் பற்றறக் கழிந்தாலல்லது, அவ்வசத்துப் பொருள்களைக் கீழ்ப்படுத்தும் மெய்யுணர்வானது மேம்படுதல் கூடாதாதலால், அப்பிராரத்துவ வாசனைப் பற்றறக் கழியும் பொருட்டு அம்மெய்யுணர்வுடைய ஞானிகளை நாடி, வழிபடவே பிராரத்துவ வினை நீங்கி மெய்யுணர்வு மேம்பட்டு நிகழும். ஆதலால் அம்மெய்யுணர் வுடையாரை வழிபடுவாயாக என்பதாம்.

அவ்விதம் பயன்பற்றி விதிக்கப்படும் வேள்வி முதலியன போல வழிபாடு பயன்வேண்டாமையாகிய இதற்கு வேண்டாவாதலால் இப்போது பின்னர்ச் செய்து அடைதல் கூடாதோ என்பாரை நோக்கி, அப்பிராரத்துவ வாசனை நீங்கும் வண்ணம் செய்யாத இடத்து உண்டாகும் குற்றமும், செய்தல் வேண்டுமென்னும் கடமையும் பின்வரும் விதம் கூறுவார்,

“ தன்னை யறிவித்துத் தான்றானச் செய்தானைப்
பின்னை மறத்தல் பிழையலது—முன்னவனே
தானே தானச் செய்துத் தைவமென்றுத் தைவமே
மானே தொழுகை வலி ”

என்று கூறினர். இதன் பொருளாவது, தன் உண்மையிது என்று அறிய மாட்டாது குருடாய்க் கிடந்த உயிர்க்குப் பல விதத்தானும், அவ்வுண்மையைத் தெரிவித்து உணர்த்தி மிகுதியும் எளிய அவ்வுயிரை மிகுதியும் அரிய தானாகும் வண்ணம் செய்து அளித்த பெரியதோர் உதவியை அதன் பின்னரும் மறக்குமாயின், அது இதற்குமுன், அறியாமையால் மறந்த குற்றத்தினைப் போலத் தீரும் திறமுடைய ஓர் குற்றமல்ல ஆகலானும், முதல்வன் அவ்விதம் தான் தானேயாகச் செய்தானும், இதுவரையும், தனக்கு ஓர் சுதந்தரமில்லாது முதல்வனது உபகாரத்தையே இன்றியமையாததாக அடிமையாக இருந்த உயிர் எக்காலத்தும், அவ்விதம் அடிமையேயாகும் ஆகலானும், தான் தானச் செய்து திருவருள் செய்த அப்பெரியோனாகிய முதல்வனை வழிபடுதலே அவ்வுயிர்க்கு வலிமையுடையதென்பதாம். ஏனெனின், முன்னர் அறியாமையால், மறந்த குற்றம் கழுவப்படுவதொன்றென்றும், அறிந்தபின் செய்யும் குற்றம் கழுவப்படாததொன்றென்றும், அவ்விதம் மறப்பின்,

“ எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்—உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு ”

என்பது போலாம். இவ்விடத்துத் தான் தானச் செய்தல் எதை எதைப் பற்றினும் அதுவதுவாம் உயிரானது, தன்னை யறிந்த இடத்தும், எண்குணங்களால் நிறைந்து தன் வண்ணமாக இருக்கச் செய்யும். அவ்விதம் செய்த இடத்தும் உயிர் தானும் சுவானுபவம் ஒன்றனுக்கே யுரித்து என்பார் தைவம் என்றும் “ தைவமே” என்றனர். மேற்கூறிய மூன்று உதாரணங்



களானும், வழி பாட்டிற்கும், இடத்து நிகழ் பொருள் மாத்திரமல்லாது இடவிசேஷமும் பெறல் வேண்டும் என்று வலியுறுத்திச் சொல்லுவார், முறையே சிவலிங்கத்தையும், சிவபத்தர் வேடத்தையும், சிவதேசிகர்களையும் அறிந்து வழிபடும் விதம் கூறப்பட்டது.

இனி, முடிந்தது முடித்தலாகக் கூறுகின்ற மெய்கண்டார் இந்நூலைக் கேட்க வல்லவர் இவர் என்று முடித்துக் காட்டுகின்றனர்.

“ சிவமென்னு மந்தரா சிந்தைநேர் நோக்கப்
பவமின்றாங் கண்வாச கத்திற்—சிவமுண்டா
மொன்று மிரண்டு மலர்த்தார்க்கிங் கொண்குருவா
லின்றிந்நூன் மும்மை மலர்க்கு.”

இதன் பொருளாவது, தான் தானகச் செய்த விதத்தால் சீவனென்று சொல்லப்படும் இயற்கையில் நீங்கிச் சிவமென்று சொல்லப்படும் வேதாந்தத் தெளிவாகிய சித்தாந்தத்தை யுடைய மாணவகனே! ஒருமல முடைய விஞ்ஞான கலர்க்கும், இருமலமுடைய பிரளயா கலர்க்கும், முறையே அறிவினிடத்தே நின்று அருட் பார்வையால் நோக்குதலானும், தேவகுருவாய் முன்னின்று செய்யும் திருநோக்கம், பரிசம், வாக்கு எனப்படும் தீக்கையானும், பிறவிக் கேதுவாகிய பசுத்துவம் நீங்கிச் சிவத்துவம் விளங்குவதால் அவ்விருவரின் வேறாகிய சகலர் என்னும் பெயரை யுடைய மும்மல முடையவர்க்கே இவ்வுலகத்து அனுபவமுடைய தேசிகரால் போதிக்கப்படும் இச்சிவஞானபோத நூல் உரித்தாகும்.

இங்கு அந்தமென்பது வேதாந்தமும், அந்ததரமென்பது சித்தாந்தமுமாதலால், அச் சித்தாந்தத்தின் பெருமையைக் கூறுவார் ‘சிவமென்னு மந்தரம்’ என்றனர்.

பன்னிரண்டாம் சூத்திரம் முடிந்தது

பயனியல் முற்றிற்று

சிறப்பியல்பு முற்றுப்பெற்றது

சிவஞானபோத விளக்கம் முடிந்தது

திருச்சிற்றம்பலம்

---

## சிறப்புப் பாயிரம்

எந்தை சனற்குமா னேத்தித் தொழ வியல்பாய்
நந்தி யுரைத்தருளு ஞான நூல்—சிந்தைசெய்து
தானுரைத்தான் மெய்கண்டான் தாரணியோர் தாமுணரா
வேதுதிருட் டாந்தத்தா லின்று.

187

---

குறிப்பு:—இவ்விளக்கத்தை மிகச் செவ்வையாக எழுதி முடித்து உபகரித்த சைவத் திருவாளர் கி. குப்புச்சாமி முதலியார் அவர்கட்கு நமது நன்றியையும் சைவ உலகத்தின் நன்றியையும் மகிழ்ச்சியுடன் செலுத்துகின்றோம்.—பத்திராசிரியர்.

# சொற்பொழிவுக் குறிப்புகள்

[ச. சச்சிதானந்தம் பிள்ளை, பி. ஏ., எல். டி.]

## V

### சன்மார்க்கம்

1 உலக வழக்கில் 'சன்மார்க்கம்'=நல்லொழுக்கம். எதிர்ச்சொல்: 'துன்மார்க்கம்.' இச்சன்மார்க்க வளர்ச்சியின் அவசியம்: உலகில் அழுக்காறு, அவா, வெகுளி பெருகிவரல்; போட்டியும், அவநம்பிக்கையும், போர் முயற்சியும்; வறுமை, திகில், துன்பம் வளர்த்துப் புலனின்ப நுகர்ச்சிக்குப் பொருள் பல தேடல். எல்லார்க்கும் கிடைக்காமையால் தொல்லை. உலகில் பெரும் பகுதி துன்பத்திலும் பயத்திலும் மூழ்கியிருத்தல். துன்பந் தீர்க்க வெறும் ராஜ தந்திரிகள் மகாநாடும் உடம்படிக்கையும் நிலைத்த பயன் தராமை. கருணையும்சிவமுமே பொருளெனத்தேராமைகாரணம். மக்களுள் சன்மார்க்கவளர்ச்சி யொன்றே பயன் தரவல்லதாம். இந்தியாவின் துன்பமும் சன்மார்க்கக் குறைவால் வந்ததே.

2 இப்பெயர்க்கு நூலாட்சி சில:—

(உ-ம்) (i) "பசுபாச நீக்கிப் பதியுடன் கூட்டிக்
கசியாத நெஞ்சங் கசியக் கசிவித்து
நசியாத உண்மைச் சொரூபோதயத் துற்று
அசைவான தில்லாமை ஆன சன்மார்க்கமே" (திருமந்திரம்)

(திருமந்திரம் - ௩-ம் தந்திரம் ௯-வது பகுதி முழுதும் பார்க்கத்தக்கது.)

(ii) "முன்னெறி யாகிய முதல்வன் முக்கணன்
தன்னெறியே சரணாதல் திண்ணமே
அந்நெறியே சென்றங் கடைந்தவர்க் கெலாம்
நன்னெறி யாவது நமச் சிவாயவே" (அப்பர்)

(iii) ஞான பாதத்தைச் 'சன்மார்க்கம்' என்னும் வழக்கு.

(சிவஞான சித்தி முதலிய சித்தாந்த நூல்களில் காணலாம்.)

(iv) "அங்கை கொடுமலர்தூவி அங்கமது புளகிப்ப
அன்பினா லுருகி விழிநீர்
ஆறாக ஆறாத பத்தியின தாவேச
ஆசைக் கடற்குள் மூழ்கிச்
சங்கர சயம்புவே சம்புவே எனவுமொழி
தழுதழுத்திட வணங்கும்
சன்மார்க்க நெறிநிலாத் துன்மார்க்க னேனையுந்
தண்ணருள் கொடுத் தாள்வையோ......" (தாயுமானார்)

(தாயுமானார் திருப்பாடல் - சிதம்பர ரகசியம் (7,8, காண்க.)



(v) 'சன்மார்க்கம்,' 'சமரச சன்மார்க்கம்,' 'சுத்த சன்மார்க்கம்,' 'சுத்த சிவமார்க்கம்'. இராமலிங்க அடிகள் இப்பெயரை மிக்கெடுத்தாண்டவர். அவர் பாடலின் 6-ம் பகுதியில் 'சுத்த சன்மார்க்க வேண்டுகோள்', 'அருள் விளக்க மாலை' முதலியவைகளில் காண்க.

3 சொற்பொருள் விளக்கம்.

'சன்மார்க்கம் சத்+மார்க்கம்=சத்தை உணர்த்தும் நெறி. 'சத்'=
"வாக்குமனோதீத கோசரமாய் நின்ற அதுவே சத்தாயுள்ள சிவம்"
"அறிவினாலறியப்பட்ட சுட்டு அசத்து" (மெய்கண்டார்)

சீவன் புறப்படுமிடம் - கேவலாவஸ்தை — சகலாவஸ்தை — சுத்தாவஸ்தை.

(i) இந்நெறியும் அட்டாங்க யோகமும் ஒன்று.

"அந்நெறி யிந்நெறி யென்னாத பாங்கத்
தன்னெறி சென்றுசமாதியிலே நின்மின்
நன்னெறி செல்வார்க்கு ஞானத்தி லேகலாம்
புன்னெறி யாகத்திற் போக்கில்லை யாகுமே" (திருமந்திரம்)

(ii) இயம நியமப் படிகளின் இயல்பும் இன்றியமையாமையும்.

(அ) "கொல்லான், பொய்கூறான், களவிலான், எண்குணன்
நல்லான், அடக்க முடையான், நடுச்செய்ய
வல்லான், பகுத்துண்பான், மாசிலான், கட்காம
மில்லான், இயமத் திடையினின் றானே"

(எண்குணன்=நல்லோரால் மதிக்கப்படும் குணம் படைத்தவன்.)

(ஆ) "தூய்மை, அருள், உண்சுருக்கம், பொறை, செம்மை
வாய்மை, நிலைமை, வரைதலே மற்றிவை
காமம் களவு கொலை யெனக் காண்பவை
நேமி யீரைந்து நியமத் தனாமே"

[உண் சுருக்கம்=ஊண் சுருக்கம், நிலைமை=உறுதியுடைமை, வரைதல்=நீக்கம்.]

"தவம், செபம்' சந்தோடம், ஆத்திகம், தானம்
சிவன்றன் விரதமே, சித்தாந்தக் கேள்வி,
மகம், சிவபூசை, ஒண்மதி, சொல்லீரைந்து
நிவம்பல செய்யின் நியமத் தனாமே" (திருமந்திரம் ந-556, 557.)

[நிவம்=காரணம்]

(iii) சன்மார்க்கத்தின் முதற்படி கொல்லாமையும் பொய்யாமையும்.

"ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று" (திருக்குறள்)

(iv) சன்மார்க்கத்தின் விதி விலக்குகளை அறியும் விதம் :

(அ) ஆன்றோர் அருளிய ஒழுக்க நூல்களை ஆராய்ந்து கோடல்.

(ஆ) திருந்திய மனச் சான்றும் இறைவன் வாக்கும்.

"நானேதும் அறியாமே என்னுள் வந்து நல்லனவும்
தீயனவுங் காட்டா நின்றாய்" (அப்பர்)

5 அன்பும் அறிவும் சன்மார்க்க ஒழுக்கத்தின் உயிர் நாடிகள்.

(மே-ள்.) "அன்பின் வழியதுயிர் நிலை"

"அறிவுடையார் எல்லாம் உடையார்" (திருக்குறள்)

6 சன்மார்க்க நெறியிற் செல்வோர் மக்கள். மக்களுயிர் மரணத்தோடழிவ தன்று.

(i) அநுபவ ஞானிகள் பகரும் சான்று.

(ii) Psychical Research Society ஆராய்ச்சிகள்.

7 இந்நெறி செல்லுகையில் காணும் இடர்ப்பாடுகள் :

(i) அஞ்ஞான மறைப்பு, உண்மை விசாரணையில் அசட்டை, வெறுப்பு, "மாட்டைத் தேடி மகிழ்ந்து மனத்துளே, நாட்டுப் பொய்யெலாம் பேசு"தல், "இன்றுளார் நாளை இல்லை யென்னும் பொருள் ஒன்று மோராதுழிதருதல்" (அப்பர்)

(ii) ஐம்புல அலைப்பு.

"மனத்தினார் திகைத்து நாளும் மாண்பலா நெறிகள் சேரக்
கனைப்பரால் என் செய்கோ யான் கறையணி கண்டத்தானே"

(iii) நாத்திகர் தொடக்கு.

"பரமேது? வினைசெயும் பயனேது? பதியேது?
பசுவேது? பாசமேது?
பத்தியேது? அடைகின்ற முத்தியேது? அருளேது?
பாவபுண்ணியங்க ளேது?
வரமேது? தவமேது? விரதமே தொன்றுமிலை
மனம்விரும் புணவுண்டுநல்
வத்திர மணிந்துமட மாதர் தமைநாடிநறு
மலர் சூடிவிளை யாடிமேற்
கரமேவ விட்டு முகை தொட்டு வாழ்ந்தவரொடு
கலந்து மகிழ்கின்ற சுகமே
கண்கண்ட சுகமிதே கைகண்ட பலனெனும்
கயவரைக் கூடா தருள்" (இராமலிங்கர்)

(iv) சாதிசமயப் பிணக்கு, உண்மையையும் அன்பொழுக்கத்தையும் கெடுத்தல்.

(தொடரும்)

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# உமாபதிசிவனார் திரட்டியருளிய அருள்முறைத் திரட்டு உரை

[மா. வே. நெல்லையப்ப பிள்ளை, பி. ஏ.]

(இதழ் ௪0, 264-ம் பக்கத் தொடர்ச்சி)

**(விளக்கம்)** நானே - ஏ - அசை. வானம் இது எல்லாம் உடையான் தன்னை - வானம்=துறக்க உலகம். இது என்னும் சுட்டுப்பெயர் அறிசுட்டாய் நாம் வாழும் நில உலகத்தைக் குறிக்கின்றது. எல்லாம் என்பதனால் இங்கே கூறப்படாத ஏனைய ஐந்து உலகங்களும் கொள்ளப்படும். தன் - அசை. கச்சு - அரைப்பட்டி (Belt). கானம் அதில் நடம் ஆடவல்லான் தன்னை - அது - பகுதிப்பொருள் விகுதி. கானம் என்பது அழிப்புக் காலத்தில் மாயா உருவங்களை எல்லாம் சிவபெருமான் அழித்து நிற்கின்ற சுடுகாடு. இந்தச் சுடுகாட்டில் அவன் செய்கின்ற நடனம் அழித்தல் (சங்காரம்) ஆகிய தொழிலைக் குறிக்கின்றது. தன் - அசை. மங்கை உமை நோக்கா - நோக்காக என்பது நோக்கா எனக் கடை உயிர்மெய் குறைந்து நின்றது. நோக்கு அருள் நோக்கு ஆதலின், அருளைக் குறிக்கும் 'மங்கை உமை நோக்காக' என்று அடிகள் கூறினார். "அருள் சூற்கொண்ட அங் கயற்கண் அமுதே" எனக் குமரகுருபர அடிகள் மீனாக்ஷி அம்மைப் பிள்ளைத் தமிழில் கூறியிருத்தல் காண்க. கடைக்கண் - கண் + கடை; - கண் கடை என்பது கடைக்கண் என மாறி நின்றது, இல்முன் என்பது முன்றில் என நின்றாற்போல. கண்ணினது கடை (Side look). அருட்குறிப்புடன் கண்ணைச் சாய்த்து நோக்கும் பார்வை கடைக்கண் பார்வை என்று கூறப்படும். ஊனம் அது எல்லாம் ஒழித்தான் தன்னை - ஊனம்=குற்றம். மலத்தினாலாகிய குற்றம். அது - பகுதிப் பொருள் விகுதி. "எல்லாம் ஒழித்தான்" என்றதனால் சிவபெருமான், தம்மிடம் மலத்தினாலாகிய குற்றங்களை எல்லாம் நீக்கி அருட்சத்தி முழுவதும் பதியச் செய்தான் என்று அடிகள் கூறுகின்றார். "ஊனந் தன்னை ஒருங்குடனறுத்து" என்று மாணிக்கவாசக அடிகள் கீர்த்தித்திரு அகவலில் கூறியிருத்தல் காண்க. உணர்வாகி - அருட்சத்தி முழுவதும் பதியப்பெற்ற பின் நிறைவான மெய் உணர்வு உண்டாகின்றது. உணர்வு என்பது உள்ளத்தினுள்ளே காண்பான் காட்சி காட்சிப் பொருள் என்னும் வேற்றுமையின்றிச் சிவபெருமானுடன் அத்துவிதமாய்க் கலந்து ஒன்றுதலால் உண்டாகும் உணர்வு தேன் அமுதை - தேனும் அமுதும் உலகினுள்ளார்க்குத் தித்தித்து இன்பம் தருதல்போல நிலையான பேரின்பமாயிருக்கின்றவனை. தேன் - அமுது - உம்மை தொகை "இன்பமதனை யெய்து வார்க்கியுமவர்க் குருவம் இன்ப கனமாதலினால்" என்று உமாபதி சிவாச்சாரியார் கூறியிருத்தல் காண்க. மலம் முற்றும் ஒழிந்தபின் நிறைவான மெய்யுணர்வும், மெய்யுணர்வினால் பேரின்பமும் உண்டாகும் தன்மையை அடிகள் தமது அநுபவத்தில் வைத்து இந்தப்பாட்டிற் கூறுகின்றார். சிவன் அடியே, ஏ - தேற்றேகாரம். சிவபெருமானுடைய திருவடிகளை யன்றிப் பிறிதொன்றினையும் சிந்திப்பதில்லை என்று அடிகள் கூறுகின்றார். "மதுமலர்க்கொன்றையான் அடியலாற்பேணா எம்பிரான் சம்பந்தன்" என்பது திருத்தொண்டைத் தொகையிற் கூறப்பட்டிருத்தல் காண்க.

ஊனாகி உயிராகி யதனுள் நின்ற வுணர்வாகிப்
பிற வனைத்தும் நீயாய் நின்றாய்
நானேது மறியாமே என்னுள் வந்து
நல்லனவுந் தீயனவுங் காட்டா நின்றாய்
தேனாருங் கொன்றையனே நின்றி யூராய்
திருவானைக் காவிலுறை சிவனே ஞானம்
ஆனாயுன் பொற்பாத மடையப் பெற்றால்
அல்லகண்டங் கொண்டடியே னென்செய் கேனே. கூஅ

(உரை) தேன் ஆரும் கொன்றையனே - தேன் நிறைந்திருக்கின்ற கொன்றை மாலை அணிந்தவனே!; நின்றியூராய் - திருநின்றியூரில் எழுந்தருளி யிருக்கின்ற வனே

வனே. திருவானைக்காவில் உறை சிவனே - திருவானைக்காவில் எழுந்தருளி யிருக்கின்ற சிவபெருமானே; ஞானம் ஆனாய் - (இத்தலங்களில் இலிங்கத் திருமேனி கொண்டெழுந் தருளியிருத்தலன்றி) அறிவு உருவாய் இருக்கின்றவனே; ஊன்ஆகி - உடலாகி; உயிராகி - (அவ்வுடலினுள்ளே விளங்குகின்ற) உயிராகி; அதனுள் நின்ற உணர்வாகி - அவ் வுயிரினுள்ளே விளங்குகின்ற உணர்வாகி ; பிறஅனைத்தும் நீயாய் நின்றாய் - இவைகள் அன்றிப் பிறபொருள்களெல்லாம் நீயாகவே விளங்கி நிற்கின்றாய்; நான் ஏதும் அறியாது - நான் (நினது அருள்பற்றி) சிறிதும் அறியாமல்; என் உள்வந்து - எனது உள்ளத்தினுள்ளே (அறிவாக) விளங்கி; நல்லனவும் தீயனவும் காட்டா நின்றாய் - நல்லன இவை தீயன இவை என்று எனக்குக் காட்டி அறிவுறுத்துகின்றாய் ; அடியேன் - உனது அடிமையாகிய நான்; உன் பொற்பாதம் அடையப்பெற்றால்; ஆண்டவனாகிய உனது அழகிய இரண்டு திருவடிகளையும் சேரப்பெற்றால்; அல்லகண்டம் கொண்டு-துன்பத்துக்கு இடமாயிருக்கிற உடலினால்; என் செய்கேன் - நான் என்ன பயனை அடைவேன் (ஒரு பயனுமில்லை என்றபடி).

(விளக்கம்) ஞானம் ஆனாய் - சிவபெருமானுக்கு அருட்சத்தியாகிய ஞானமே உருவம் ஆதலின் ஞானம் ஆனாய் என்றார். ஊன் ஆகி - ஊன்=தசை, அது இங்கே ஆகு பெயராக உடலைக் குறிக்கிறது. உணர்வு - என்பது முன்னைய கூ0-வது பாட்டில் விளக்கப்பட்டது; அங்குப் பார்க்க; நல்லனவும் தீயனவும் காட்டாநின்றாய் - உள்ளத்தினுள்ளே நின்று நல்லனவும் தீயனவும் காட்டுவது மனச்சான்று (Conscience) என்று கூறப்படும். அல்ல கண்டம் - துன்பம் ; பழைய தமிழ்ச் சொல். இக்காலத்து வழங்கப்படுதலின்று. இங்கே அது ஆகு பெயராய்த் துன்பத்துக்கு இடமாயிருக்கிற உடலைக் குறிக்கின்றது. கொண்டு - மூன்றாம் வேற்றுமைச் சொல் உருபு கருவிப் பொருளில் வந்தது. என் செய்கேன் - செய்கேன் என்பதில், கு-எதிர் காலத்தைக் காட்டும் விகுதி. சிவனது திருவடி அடையப் பெற்ற பின் உடலால் அடையத் தக்க பயன் ஒன்றுமில்லை. வினைப் பயன் நுகருதற்கு உலக வாழ்வில் உடம்போடு கூடிய பிறவி உண்டாதலால் வினை முற்றிலும் நீங்கி மெய் உணர்வு பெற்றுத் திருவடி அடைந்தபின் உடல் வேண்டப் படுவதில்லை என்பது கருத்து. ஏ - ஈற்றசை. இந்தப் பாட்டில் முதல் இரண்டு அடிகளிலும் திரோதானமல நிலையும் பின் இரண்டு அடிகளிலும் அம் மலம் நீங்கிய அருள் நிலையும் கூறப்படுகின்றன.

விள்ளத்தான் ஒன்று மாட்டேன் விருப்பெனும் வேட்கையாலே
வள்ளத்தேன் போல நுன்னை வாய்மடுத் துண்டிடாமே
உள்ளத்தே நிற்றி யேனும் உயிர்ப்புளே வருதியேனுங்
கள்ளத்தே நிற்றி யம்மா எங்ஙனங் காணுமாறே. கூஉ

(உரை) உள்ளத்தே நிற்றி எனும் - (சிவபெருமானாகிய நீ) எனது உள்ளத்தில் நிலையாக இருந்தாலும்; உயிர்ப்பு உளே வருதி எனும் - நான் எனது மூச்சை உடலினுள்ளே இழுத்து வாங்கும்பொழுது நீ அம்மூச்சுடனே வருகிறதாயிருந்தாலும்; வள்ளத் தேன் போல=(ஒருவன் தன் முன்னே வட்டிலில் வைத்திருக்கிற தேனை அதன் மேலுள்ள வேட்கையால் அதிலே தன் வாயை வைத்து மிக்க ஆவலாய் உறிஞ்சி உண்ணுதல் போல; விருப்பு எனும் வேட்கையாலே - எனது உள்ளத்தில் நின்னிடத்தில் அன்பு காரணமாக எழுகின்ற வேட்கையால்; நுன்னை வாய் மடுத்து உண்டிடாமே- எனது உள்ளத்திலிருக்கிற உன்னை எளிதில் அறிந்து எனது ஆசை தீர இன்பம் நுகராதபடி ; கள்ளத்தே நிற்றி - உன்னை அறியாதிருக்கும்படி வஞ்சகமாய் நிற்கிறாய்; காணும் ஆறு எங்ஙனம் - (ஆதலின் உன்னை) உணர்ந்து நுகரும் தன்மை எப்படி ? (உணரமுடியாது என்றபடி) ; அம்மா - இது என்ன வியப்பு ! ஒன்றும் விள்ளமாட்டேன் - நான் இதைப்பற்றி எவரிடத்திலும் வாய்திறந்து சிறிதும் சொல்லமாட்டேன்.



(விளக்கம்) இந்தத் தேவாரப்பாட்டில் ஒருவர் தமது தவ முயற்சியின் பயனாகச் சிறிதளவு திரோத மலம் நீங்கித் தமது உள்ளத்திலே சிவபெருமானது அமுத வெள்ளி ஒவ்வொரு நேரத்தில் சிறிது விளங்கி மறைந்தபோதலை உணர்ந்து வருத்தமும் வியப்பும் எய்துகின்ற அநுபவத்தை அடிகள் கூறுகின்றார்.

தெள்ளத் தேறித் தெளிந்து தித்திப்பதோர்
உள்ளத் தேறல்அமுத வொளி வெளி
கள்ளத்தேன் கடியேன் கவலைக் கடல்
வெள்ளத் தேனுக் கெவ்வாறு விளைந்ததே.

என்று அடிகள் தனித் திருக்குறுந்தொகையிற் கூறியருளினமை காண்க. உயிர்ப் புடனே - உள்ளே என்பது உளே எனக் குறுகி நின்றது. சிவசத்தி இயக்கத்தால் மூச்சு இயங்குதலால் உயிர்ப்புள்ளே வருதியேனும் என்றார். வள்ளத்தேன்போல - உவமப் பொருளுக்குக் கூறப்பட்ட "விருப்பெனும் வேட்கையாலே வாய் மடுத்துண்டல்" என்பதை உவமைக்கும் வருவித்துப் பதவுரையில் பொருள் கூறப்பட்டது. வள்ளத்தேன் என்றதனால் சேய்மையிற் சென்று வருந்திப் பெறும் மலைத்தேன்போல் அல்லாது எளிதில் உண்ணத்தகுந்த அண்மையிலுள்ள தேன் உள்ளத்திலுள்ளது என்பது குறிப்பிடப்பட்டது. தேன் உண்ணும் பொருளில் மிக்க இனிமையான பொருளாயிருத்தலுடன், உடல் நோயைத் தீர்க்கும் மருந்தாகவு மிருத்தல்போல சிவபெருமான் உயிர்களுடைய மலநோயைத் தீர்க்கும் மருந்தாயும் மலம் நீங்கின உயிர்களுக்கு நுகரும் இன்பப் பொருளாயு மிருத்தல்பற்றி அவனை சைவ சமயாசாரியர்களும் பிற பெரியார்களும் 'தேனே'எனவிளித்துப் பல இடங்களிலே பாடியிருக்கின்றனர். விருப்புஎனும் வேட்கை-என்னும் என்பது எனும் எனக் குறுகி நின்றது, என்று கூறப்படும். விரும்பு உள்ளத்திலே நிகழும் அன்பு; வேட்கை உள்ளத்திலே நிகழும் அன்பு காரணமாக வெளியிலுள்ள பொருள்களைப் பற்றுதல். வேட்கை=ஆசை. 'அன்பீனும் ஆர்வமுடைமை' என்றார் திருவள்ளுவநாயனார். ஆர்வம், வேட்கை, ஆசை என்பன ஒரு பொருட்சொற்கள். விருப்பின் காரியமாகிய வேட்கை என்பதற்குப் பதிலாக விருப்பென்னும் வேட்கை என்று, காரணம் காரியமாக உபசரித்துக் கூறப்பட்டது. கள்ளத்தே நிற்றி - சிவபெருமான் உயிர்களுடைய உள்ளத்திலே அவைகள் அறியாது நிற்றலால் கள்ளத்தே நிற்றி என்றார். விள்ளத்தான் ஒன்றும் மாட்டேன் என்பதை ஒன்றும் விள்ளமாட்டேன் என மாற்றுக. ஒன்றும் - சிறிதும்; தான்-அசை. பெரியார்கள் தங்கள் உள்ளத்தில் சிவபெருமானைப் பற்றி உணரும் அநுபவத்தைப் பிறரிடம் சொல்லமாட்டார்கள். கண்டவர் விண்டிலரே என்ற பழமொழி இதனாலே வந்தது. காணும்ஆறே - காணுதல் என்பது உள்ளத்தில் உணர்தல். ஆறு=தன்மை. ஏ - ஈற்றசை.

வெள்ள மெல்லாம் விரிசடை மேலோர் விரிகொன்றை
கொள்ள வல்லான் குறைகழ லேத்துஞ் சிறுத்தொண்டர்
உள்ள மெல்லா முள்க நின்றாங்கே யுடனாடும்
கள்ளம் வல்லான் காதல்செய் கோயில் கழுக்குன்றே. கூங

(உரை) வெள்ளம் எல்லாம் விரிசடை கொள்ள வல்லான் - (பகீரதன் தனது தவவலியால் வானுலகி லிருந்து வரவழைத்த) கங்கை யாற்றின் பெருக்கை யெல்லாம் (ஒரு துளியாகச் செய்து தனது சென்னியின்மே லுள்ள) விரிந்த சடையிலே தாங்கும் ஆற்றல் உடையவனும் ; மேல் ஓர் விரிகொன்றை கொள்ள வல்லான் - அக் கங்கையின் மேல் ஒரு விரிந்த கொன்றை மாலையைத்தரிக்கும் ஆற்றல் உடையவனும் ; சிறுத்தொண்டர் உள்ளம் எல்லாம் உள்கி நின்று - தன் முனைப்பு கெட்டுத் தாழ்மையாம் தன்மை பூண்டு ஒழுகுகின்ற அடியார்களுடைய உள்ளம் முழுவதிலும் கலந்து நினைத்துக்கொண்

டிருக்கு ; ஆங்கே உடன் ஆடும் கள்ளம் வல்லான் - அவர்களுடைய உள்ளத்தில் அவர்களை ஆட்டுவித்துத் தானும் அவர்களுடன் அவர்கள் அறியாது நடனம் செய்யும் ஆற்றல்உடையவனும் ஆகிய சிவபெருமான் ; காதல்செய் கோயில் - உயிர்களுக்கு அருள் செய்யும் பொருட்டு அவர்கள்மேல் அன்புகொண்டு எழுந்தருளி யிருக்கின்ற திருக் கோயிலானது கழுக்குன்று - திருக்கழுக்குன்றம் என்னும் தலத்தில் உள்ளது.

(விளக்கம்) வெள்ளம் எல்லாம் விரிசடை மேலோர் விரிகொன்றை கொள்ள வல்லான் - உலகமெல்லாம் அழிக்கும் தன்மையுடைய கங்கைப் பெருக்கை ஒரு துளியாகச் செய்து சடைமேல் வைத்ததும் அவ்வாறு துளியாகச் செய்யப்பட்ட கங்கையின்மேல் கொன்றை மாலையைத் தரித்ததும், சிவபெருமானுடைய முழுஆற்றலைக் குறித்தலால் அவனை வல்லான் என்று அடிகள் கூறினர். சிறுத்தொண்டர். சிறுமை+தொண்டர். தாழ்மையாம் மனத்தினை உடைய அடியார்கள். சிறுத்தொண்ட நாயனர் குறிப்பிடப் பட்டதாகச் சொல்லினும் பொருந்தும். ஆனல் அவரை இந்தத் தேவாரப் பதிகத்திற் குறிப்பிடக் காரணமில்லை. உள்கி நின்று - சிவபெருமான் பொதுவாக மக்கள் எல்லாருடைய உள்ளத்திற் கலந்து நின்று அவர்களுடைய அறிவு செயல்களை விளக்குகின்றான். அவ்வாறு அவன் உயிருக்கு அறிவு செயல்களை விளக்காவிட்டால் உயிர்ஒன்றனை அறிதலும் செய்தலும் முடியாது. இது காட்டும் உதவி என்று கூறப்படும். சிவபெருமான் பொதுத்தன்மையி லன்றிச் சிறப்பாகத் தொண்டர்களுடைய உள்ளத்திற் கலந்து நின்று உள்குதலால் சிறுத்தொண்ட ருள்ளமெல்லாம் உள்கிநின்று என அடிகள் கூறியருளினர். உடன் ஆடும் கள்ளம் வல்லான் - தொண்டர்களுடைய உள்ளத்தில் உடன் ஆடுதல் என்பது சிவபெருமான் தொண்டர்களுடைய உள்ளத்திற் கலந்து நின்று அவர்களை அதிட்டித்து அவர்கள் போகம் நுகரும்படி விடயத்திலும் கலந்து நிற்றலாகும். இவ்வாறு சிவபெருமான் செய்யாவிடின் அவர்கள் விடயத்திற் சென்று போகம் நுகருதல் செல்லாது. இது காணும் உதவி என்று கூறப்படும். காரைக்கா லம்மையார் தாம் பாடிய அற்புதத் திருவந்தாதி ௨௦-வது பாட்டில் 'அறிவிப்பான் தானே' என்று காட்டு முதவியைக் கூறியபின் 'அறிவா யறிகின்றான் தானே' என்று காணும் உதவியையும் உடன் கூறியருளியது காண்க. ஆடுதல்=நடனம் செய்தல். அது உயிர்களை இயக்கி ஐந்து தொழில்களையும் செய்தலைக் குறிக்கிறது. தொண்டர்கள் அறியாது அவர்களுக்குச் சிவபெருமான் காட்டு முதவியும் காணு முதவியும் செய்து வருதலின் அவனைக் 'கள்ளம் வல்லான்' என அடிகள் கூறினர். ஏ - ஈற்றசை.

## ௪. அருளது நிலை

நெறிநீர்மையர் நீள்வானவர் நினையும்நினை வாகி
அறிநீர்மையி லெய்துமவர்க் கறியு மறிவருளி
குறிநீர்மையர் குணமார்தரு மணமார்தரு குன்றில்
எறிநீர்வயல் புடைசூழ்தரு மிடும்பாவனம் மிதுவே. ௩௪

(உரை) நெறிநீர்மையர் - (நில உலகில்) அருள்வழியில் ஒழுகும் தன்மை உடைய மாந்தரும்; நீள்வானவர் - (வானுலகில் வாழும்) நீண்ட வாழ்நாளை உடையதேவரும்; நினையும் நினைவாகி (உம்) - தங்களுடைய உள்ளத்தில் நினைக்கின்ற நினைவாகியும்; எய்தும் அவர்க்கு - (அவ்வாறுஅருள் வழியிலொழுகி தமது திருவடிகளை அடைய விரும்பும் அம் மாந்தருக்கும் தேவருக்கும்; அறிநீர்மையில் அறியும் அறிவு அருளி - (உம்) அவரவர் தத்தம் உள்ளத்தில் அறியும் இயல்பினை அறிந்து அவ்வியல்புக்குத் தக்கவாறு, தம்மை அறியும்படி அறிவித்துச் (சிவபோக விடயத்திற் செலுத்தியும் அருள் செய்கின்ற); குணம் ஆர்தரு - அருட் பண்பு நிறைந்துள்ள; குறிநீர்மையர் - உயிர்களெல்லாம் பேரின்பம் அடைதற்குக் குறியிடமாம் தன்மையை உடைய சிவபெருமான் (திருக்கோயில் கொண்டிருக்கின்ற); மணம் ஆர்தருகுன்றில் - நறுமணங்கமழ்கின்ற மலைமேல் (அல்லது மலைப்பக்கத்தில்) உள்ள; எறி நீர்வயல் புடைசூழ்தரும் - அலைவீசுகின்ற நீருள்ள வயல்களாற் சூழப்பட்டிருக்கின்ற; இடும்பாவனம் இது - திரு இடும்பாவனம் என்ற தலம் (நாம் காண்கின்ற) இந்த இடம் ஆகும்; ஆகலான் அடியார்கள் இக்கோயிலுக்குச் சென்று வழிபடுக என்பது குறிப்பெச்சம்.



(விளக்கம்) நெறி நீர்மையர் - நெறி=அருள்நெறி. அதாவது அருளையே குறியாகக் கொண்டு ஒழுகும் நெறி. நீர்மை=இயல்பு, தன்மை. நெறிநீர்மையர் என்பது நீர் பள்ளத்தை நோக்கிச் செல்லுதல் இயல்பாதல் போல, அருளினையே நோக்கும் நெறியிலே ஒழுகும் இயல்பினை உடையவர். நீள்வானவர்-தேவர்கள் நுண்ணுடல்களை உடையவர் ஆதலின், அவர்கள் நமது புறக்கண்களால் அறியப்படமாட்டார்கள்; அவர்கள் மாந்தரை நோக்க நீண்ட வாழ்நாளை உடையர் ஆதலின் 'நீள்வானவர்' என்றார். தேவர்களுக்கு ஒருநாள், மாந்தருக்கு ஓர் ஆண்டு ஆகின்றது. பொதுவாக எல்லாத் தேவர்களும் கூறப்பட்டிருத்தலால் மாந்தரைப்போல் அவர்களுக்குள் அருள் நெறியில் ஒழுகாதவர் பெரும்பான்மை இலர் என்பது பெறப்பட்டது. நினையும் நினைவாகி - அருள்நெறியில் ஒழுகுகிறவர்களுடைய நினைவும் அவர்கள் பேரின்பம் அடைதல் வேண்டும் என்ற சிவபெருமானுடைய நினைவும் ஒன்றுபட்டிருத்தலால், அடிகள் "நினையும் நினைவாகி" என்றார். இதனால் கண்ணொளியானது தன்னுடன் கலந்துள்ள கதிரவனொளியின் துணையின்றி உலகப் பொருள்களைக் காண்டல் செல்லாததுபோல உயிருடைய ஏகதேச அறிவு வேட்கை செயல்கள், அவைகளுடன் சிவபெருமானுடைய நிறைவான அறிவு வேட்கைச் செயல்கள், கலந்து உணர்த்தினா லன்றி விளக்க முறா ஆதலின், உயிரினது தூல அறிவுக்குள்ளே சிவபெருமானுடைய சூக்கும அறிவு நின்று உயிருக்குக் 'காட்டும்' உதவி'யைச் செய்கிறது என்ற உண்மை கூறப்பட்டது "அறிவினுள்ளான் அறிவுக்குக் காட்டாகி நின்றானை" என்று சிவஞானபோத வெண்பா கூறுதல் காண்க. திருநாவுக்கரசு அடிகள் திருமாற்பேறு திருத்தாண்டகம் ௭-வது பாட்டில், "நினையாதாரை நினையானை நினைவோரை நினைவோன் தன்னை' என்று கூறி யருளினர். நினைவாகி என்பதற்குப் பின்'உம்' தொக்கி நிற்பதை விரித்துப் பொருளுரைக்கப்பட்டது. பின் வருகிற 'அருளி' என்பதற்கும் அவ்வாறே 'உம்' விரித்துப் பொருளுரைக்கப்பட்டது. அறிநீர்மையில் அறியும் அறிவு அருளி (உம்) - உயிர்களெல்லாம் தத்தம் பக்குவத்துக்கு ஏற்பப் படி முறையில் அறிவிக்க அறியும் தன்மையுடையன ஆதலின், அடிகள் இவ்வாறு கூறினர். திருமூலர் திருமந்திரம் 130-வது பாட்டில் (இரமண சாஸ்திரி பதிப்பு) எவ்வாறு காண்பா னறிவு தனக்கெல்லை - அவ்வாறருட் செய்வனாதியான்றானும்" என்று கூறி யருளினர். இதனால் உயிர் ஒன்றனை விடயித்தற்கண் சிவபெருமான் அதனை அதிட்டித்து அவ்விடயத்திலுஞ் சென்று கலந்தால் அன்றி விடயியாது என்ற 'காணும் உதவி' கூறப்பட்டது. இந்தக் காணும் உதவி மேலே கூறப்பட்ட 'காட்டும் உதவி'யின் பின் நிகழ்வது. குணம் - அருட்குணம்; மாயையின் தொடர்புடைய சாத்துவிக முதலிய குணங்கள் அல்ல. அருட்குணம் என்பதில் அறிவு வேட்கை செயல்கள் அடங்கும்; இன்னும் முற்றறிவு முதலிய எண்குணங்களும் அடங்கும். ஆர்தரு - ஆர்தல்=நிறைதல். தரு - என்பது வேறு பொருளின்றி 'ஆர்' என்பதற்குப் பகுதிப் பொருள் விகுதியாய் வரும் துணைவினை. பின் வருகிற மணம் ஆர்தரு ; சூழ்தரு என்பனவற்றிற்கும் இவ்வாறே கொள்க. ஆர்தரு குறிநீர்மையர் - மூன்று காலங்களுக்கும் பொதுவான வினைத்தொகை. குறி நீர்மையர் - குறி=குறியிடம் - முடிவிடம், இலக்கு ; எல்லை. எல்லா உயிர்களும் முடிவில் அடைதற்கு இலக்கு ஆம் தன்மையர். திருநாவுக்கரசு அடிகள் திருக்கடம்பூர்க் கரக்கோயில் திருக்குறுந்தொகை ௧-வது பாட்டில் 'மல்லை ஞாலத்து வாழுமுயிர்க்கெல்லாம் எல்லையான பிரானார்' என்று கூறியருளினமை காண்க. இப்பாட்டின் கருத்தை "நெறியே யென்

னும் நெறிநின்றவர்கள் - நிலைக்கின்ற நீதி வேதாந்த நிலைக் - குறியே யென்னுங் குணக்குன்றே யென்னுங்-குலாத்தில்லை யம்பலக் கூத்தனையே'' என்ற திருமாளிகைத் தேவர் திருவிசைப்பாப் பாட்டுக் கருத்துடன் ஒத்து நோக்குக. ஏ - ஈற்றசை.

நஞ்சடைந்த கண்டத்தர் வெண்ணீறாடி
நல்லபுலி யதள்மேல் நாகங்கட்டி
பஞ்சடைந்த மெல்விரலாள் பாகமாகப்
பராய்த்துறையே னென்றோர் பவளவண்ணர்
துஞ்சிடையே வந்து துடியுங் கொட்டத்
துண்ணென் றெழுந்திருந்தேன் சொல்லமாட்டேன்
புன்சடையின் மேலோர் புனலுஞ்சூடிப்
புறம்பயம்நம் ஊரென்று போயினாரே. ௫

**(உரை)** நஞ்சு அடைந்த கண்டத்தர் - கடலில் நின்றெழுந்த நஞ்சினை உண்டதனால் ஆகிய நீலநிறக் கழுத்தினரும்; ஓர் பவள வண்ணர் - ஒப்பற்ற பவள நிறமேனியினருமாகிய சிவபெருமான்; வெண்ணீறு ஆடி(உம்) - தமது திருமேனி முழுதும் வெண்மையான திருநீறு பூசியும்; நல்லபுலி அதள்மேல் நாகம்கட்டி (உம்) - அழகான புலித்தோல் அரையில் உடுத்தி அத்தோலின்மேல் பாம்பினைக் (கச்சாகக்) கட்டியும்; பஞ்சு அடைந்த மெல்விரலான் பாகமாக (உம்) - செம்பஞ்சு ஊட்டிய மென்மையான விரல்களை உடைய உமாதேவியாரை இடது பாகத்தில் வைத்தும்; புன்சடைமேல் ஓர் புனல் சூடியும் - தமது சிறிய சடையின் மேலே ஒப்பற்ற கங்கையை அணிந்தும்; துஞ்சு இடையேவந்து - நான் தூங்குங்காலத்து என்னிடத்தில் வந்து; பாராய்த்துறையேன் என்று - தாம் தங்கியிருக்கும் இடம் திருப்பாராயத்துறை என்று சொல்லி; துடியும் கொட்ட - (அவ்வாறு சொன்னதும் அன்றித் தமது வலது கையில் வைத்திருக்கிற) உடுக்கையையும் கொட்டி ஒலிசெய்ய; துண் என்று எழுந்திருந்தேன் - (அவ்வொலியைக் கேட்டு நான்) அச்சங்கொண்டு நித்திரை நீங்கி எழுந்தேன்; சொல்லமாட்டேன் - நான் அவரிடம் ஒன்றும் சொல்லமுடியவில்லை; நம் ஊர் புறம் பயம் என்று போயினார் - ''நமது ஊர் திருப்புறம்பயம்'' என்று சொல்லி என்னை விட்டுச் சென்றனர்; ஆதலின் நமது ஊருக்கு 'வா' என்பது குறிப்பெச்சம்.

**(விளக்கம்)** இத்தேவாரப்பாட்டு திரோத மலத்தின் வயப்பட்டுச் சிவபெருமானை மறந்து உலக போக வாழ்வில் உழல்கின்ற ஒருவனிடம் சிவபெருமான்வந்து தம்மை ஆய்ந்து நினைந்து துதிக்கும்படி சொல்லி அபயம் கூறிப்போனதாக அகப்பொருட்டுறையில் வைத்துத் தலைவி தனது பாங்கியிடம் கூறினதாகக் கூறுகின்றது.

நஞ்சடைந்த கண்டத்தர் - இதனால் சிவபெருமான் உயிர்களுக்குவந்த இடர்களை நீக்கி அருள் செய்கிறவர் என்பது குறிக்கப்பட்டது. வெண்ணீறு ஆடி - ஆடுதல்=பூசுதல், ஆடி என்ற வினையெச்சத்தின் பின் 'உம்' தொக்கி நின்றது; அதனை விரித்துப்பொருள் உரைக்கப்பட்டது. இவ்வாறே பின்வருகிற 'கட்டி, பாகமாக' என்பவற்றிற்கும் 'உம்' விரித்து உரைக்க. 'வெண்ணீறாடி' என்பதனால் சிவபெருமான் இயல்பாகவே பாசங்களினின்று நீங்கிய தூய்மை உடையர் என்பதும், உயிர்ப் பொருளையும் உயிரில் பொருளையும் அழிப்புக்காலத்தில் தம்மிடத்தில் ஒடுக்கி நிற்பவர் என்பதும் குறிப்பிடப்பட்டன. நல்ல புலிஅதள்மேல் நாகம் கட்டி - புலியும் பாம்பும் தாருகாவனத்து முனிவர்களால் சிவபெருமான்மேல் விடப்பட்டவை. பேரருளுடைய சிவபெருமானிடத்து, தீங்கு செய்யும் பிராணிகளும் யாதொரு ஊறுசெய்யும் ஆற்றலில வாயின என்பது குறிப்பிடப்பட்டது. பஞ்சு அடைந்த மெல்விரலாள் பாகமாக - என்பதனால் சிவபெருமான் அருளின் வேறல்லாதவர் என்பது குறிப்பிடப்பட்டது. பாகமாக என்ற



சொற்றொடருக்குப் பின் 'வைத்து' என்ற சொல் அவாய்நிலையான் வந்தது. அதனை வருவித்துப் பொருள் உரைக்கப் பட்டது. புன்சடைமேல் ஓர் புனல் சூடியும் - இதனால் சிவபெருமான் வரம்பில்லாத ஆற்றல் உடையர் என்பது குறிப்பிடப்பட்டது. புன்சடை-புன்மை சிறியசடையைக் குறிக்கின்றது. புனல்என்ற சொல்லுக்குப்பின்னுள்ள 'உம்' என்பதைச் சூடிஎன்ற சொல்லுக்குப்பின் வைத்துப் பொருள் உரைக்கப்பட்டது. துஞ்சு இடையே வந்து - துஞ்சுதல்=தூங்குதல். அது இங்கே உயிர் திரோதமலத்தால் சிவனை மறந்திருத்தலை உள்ளுறைப் பொருளாகக் குறிக்கிறது; இடை=பொழுது; சமயம். பாராய்த்துறையேன் - பாரா+ஆய்=பாராய். நெட்டுயிர் ஆகாரங் கெட்டது. பரவு, பரா என ஆயது. சுறு=சுறவு. உணு=உணவு. பிணு=பிணவு என வருதல்போல. இரண்டும் முதனிலைத் தொழிற்பெயர்கள். பரா ஆய் என வருதலை ஆய்பரா என மாற்றி ஆய்தலுக்கும் பரவுதலுக்கும் என்று விரித்துப் பொருள் உரைக்க. துறை=தங்குமிடம். ஆகவே பாராய்த்துறையேன் - என்பதற்கு ''உயிர்கள் ஆய்தலுக்கும் பரவுதலுக்கும் இடமாயுள்ள பொருள் நானுயிருக்கிறேன்'' என்பது உள்ளுறைப்பொருள். ஆய்தல் சிவனுடைய பொது இயலை அறிதற்கேதுவான கேட்டல் சிந்தித்தல்களையும், பரவுதல் அவனுடைய சிறப்பு இயலை அறிதற்கேதுவான கேட்டல் சிந்தித்தல்தெளிதல் நிட்டைகூடல் நான்கினையும் குறிக்கும். இந்த உண்மையை மறந்து நீ உலகபோகத்தில் உழல்கின்றாய் என்று சிவபெருமான் திரோதமல வயப்பட்டிருக்கும் உயிருக்குச் சொன்னார் என்பது கருத்து. சிவஞானபோதம் அ-ம் சூத்திரத்தில் ''ஐம்புலவேடரின் வளர்ந்து அயர்ந்தனை'' என்றகருத்துக்கூறி உயிருக்கு அதன்உரிமையைச்சிவபெருமான் அறிவித்தவாறாயிற்று. துண் என்று - துண் - அச்சத்தைக் குறிக்கும் ஓர் இடைச்சொல். அது விரைவினையும் குறிக்கும். சொல்லமாட்டேன் - மாட்டாமை - இயலாமை. சிவன்வந்து அறிவித்ததை உணராமே அன்றி உணர்ந்ததைப் பிறருக்குச் சொல்ல முடியாது ஆதலின், சொல்ல மாட்டேன் என்றார். துடியுங்கொட்ட - துடி - உடுக்கை. அதனைக் கொட்டுதலால் நாதம் உண்டாகின்றது. நாதம் அறிவுக்குக் காரணமா யிருத்தலால் துடிகொட்ட என்பது அறிவிக்க' என்று பொருள்படும். சிவபெருமான் தமது இயல்பினை உயிருக்குக் காட்டித் தாம் உயிருக்குந் தந்தையாந் தொடர்பு உடையவர் என்று அறிவித்தார் என்பது கருத்து. ''உமையறியக் கொந்தணை தாரீருரைமினென்றேன் துடிகொட்டினரே'' என்ற வாக்கியம் வருகிற பொன் வண்ணத் தந்தாதி ௬௬-வது பாட்டில் துடிகொட்டினரே என்பதற்கு ''தாம் இன்னாரென உயிருக்குச் சிவபெருமான் அறிவித்தார்'' என்ற பொருள் வெளிப்படையாய் விளங்குதல் காண்க. துடியும் என்பதிலுள்ள 'உம்' இறந்தது தழீஇய எச்சஉம்மை ''பாராய்த்துறையேன்'' என்று உரைத்ததன்றி துடியும் கொட்ட என்று 'உம்' இறந்தது தழுவியது. துடிகொட்ட என்பதனால் சிவஞான போதம் அ-வது சூத்திரத்தில் ''தம்முதல் குருவுமாயுணர்த்த'' என்ற கருத்து உரைக்கப்பட்டது. எழுந்திருந்தேன் - எழுந்தேன் - இரு பகுதிப்பொருள் விகுதி. எழுந்தேன் என்பதற்கு ''இனி உலகப்பற்றைவிட்டுச் சிவபெருமானை அடைதல்வேண்டும்'' என்ற மன எழுச்சியை உடையவனாயினேன் என்பது உள்ளுறைப் பொருள். ''ஆசான் முன்னே துயின்மாணவகரைத் தேசாய்த்தண்டா லெழுப்புஞ் செயல்போல், நேசாயீசனு நீடாணவத்தரை ஏசாதமாயாடனாலே யெழுப்புமே'' என்று திருமூலர் திருமந்திரம் 2163-வது பாட்டிற் கூறியிருத்தல் காண்க. நம் ஊர் புறம்பயம் என்று போயினார் - வெளிப்படையாகப் புறம்பயம் என்பது திருப்புறம்பயம் என்ற தலத்தைக் குறிக்கின்றது. இந்தத் தேவாரம் திருப்புறம்பயத்திலுள்ள சிவபெருமானுக்குத் துதியாகப் பாடப்பட்டது. புறம்பயம் என்பதைப் பயம்புறம் என மாற்றி, ''பயம் (உனக்குப்) புறம் (ஆகுக)'' என விரித்து நீ அஞ்சவேண்டாம். நான் உன்னை உலகப்பற்று மயக்கத்திலிருந்து நீக்கிப் பேரின்பம் தந்து காத்தருளுவேன் நீ நம்மிடம் வா'' என்ற கருத்தை உள்ளுறைப் பொருளாகக் கொள்க. உள்ளுறைப் பொருள் கொள்ளுங்கால் பாராய்த்

துறை என்பதிலுள்ள துறையை "திரு சைவத்துறை என்றும் 'புறம்பயம் நம் ஊர் என்பதிலுள்ள ஊரினை சைவ (சமய)த் துறையாலடையும் அருள்வெளி என்றும் நாம் கொள்ளலாம். ஏ ஈற்றசை. இத்தேவாரப்பாட்டு, அகப்பொருட்டுறையில் வைத்துஞானத் திற் சரியையும், சிறப்பியலுக்கு உரிய கேட்டல் ஞானத்தையும் கூறுகின்றது. இது பக்குவமுள்ள உயிருக்குச் சிவபெருமான் வெளிபட்டு உணர்த்துதலைக் கூறுகின்றது. பவள வண்ணர் - என்பதனால் தமது பெயர் சிவன் என்பதும் நஞ்சடைந்த கண்டம் முதலிய கோலங்களால் தமது அருட்பண்பும், புறம்பயம் நம் ஊர் என்றதனால் தமது ஊர் (பேரின்பத்துறை) இன்னது என்பதும் சிவபெருமான் கூறினதாக நாம் அறிந்து கொள்ளலாம்.

கொள்ளைக் குழைக்காதிற் குண்டைப் பூதங்
　　கொடுகொட்டி கொட்டிக் குனித்துப் பாட
உள்ளங் கவர்ந்திட்டுப் போவார்போல வுழிதர்வர்
　　நான் தெரிய மாட்டேன் மீண்டேன்
கள்ளவிழி விழிப்பர் காணாக் கண்ணாற்
　　கண்ணுள்ளார் போலக் கரந்து நிற்பர்
வெள்ளச் சடை முடியர் வேத நாவர்
　　வெண்காடு மேவிய விகிர் தனாரே. ௫௯

(உரை) காதில் - இரண்டு காதுகளிலும்; ஐக்குழைகொள-அழகான குண்டலங்களை அணிந்திருக்கின்ற; குண்டைப்பூதம் - குறுகித் தடித்திருக்கிற உடல்களை உடைய பூதங்கள்; கொடு கொட்டிக் கொட்டிக் குனித்துப் பாட - கொடு கொட்டி என்னும் பறையைக் கொட்டிக்கொண்டு ஆடிப் பாட; வெள்ளச் சடைமுடியர் - கங்கை யாற்றுப் பெருக்கை (ஒரு துளியாகச் செய்து) சடையுடைய தமது தலையிலே தரித் திருக்கிற வரும்; வேதம் நாவர்-வேதங்களை நாவினாலே சொன்னவரும்; வெண்காடு மேவிய விகிர் தனார்-திருவெண் காட்டில் திருக்கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கிறவரும் ஆகிய சிவபெருமான்; உள்ளம் கவர்ந்திட்டுப் போவார் போல - எனது உள்ளத்தைத் தம் வயப் படுத்திக்கொண்டு நீங்கும் கருத்து உடையவர் போன்று; உழிதர்வர் - (அதன்கண்) ஞான நடனம் செய்து கொண்டிருப்பர்; நான் தெரிய மாட்டேன் மீண்டேன் - (அவ்வாறு சிவபெருமான் எனது உள்ளத்தில் ஞான நடனம் ஆடி அதனைத் தம் வயப்படுத்துவதை) நான் அறியாதவனாய் அவரோடும் ஒன்று பட்டுச் சேராது என் வழியிலே திரும்பினேன்; காணாக்கண்ணால் - (நான் அவ்வாறு திரும்பினதை அவர் பார்த்துத் தமது கருத்தை நான் அறிந்து கொள்ளும் வண்ணம்) தமது நெற்றி மேலுள்ள ஞானக் கண்ணினால்; கள்ள விழி விழிப்பர் - எனது ஊனக் கண்களுக்குத் தெரியாதபடி என்னைப் பார்ப்பார்; கண்ணுள்ளார் - எனது அறிவுக்குள் அறிவாயிருப்பவராகிக் கரந்து நிற்பர் - எனது உயிரறிவுக்குத் தெரியாமல் மறைந்து நிற்பர்; இது என்ன புதுமை என்பது குறிப்பெச்சம்.

இத்தேவாரப் பாட்டில் அடிகள், காமரச மறியும் பருவம் வந்த ஒரு தலைவி, தான் எதிர்ப்பட்ட தலைவன் தன்னிடம் வந்து செய்த புதிய அநுபவ நிகழ்ச்சியைத் தனது பாங்கிக்குக் கூறும் கூற்றாகச் சொல்லும் அகப்பொருட்டுறையில் வைத்துப் பேரின்பச் சுவை அறியும் பருவம் வந்த ஒருயிர், தான் சிவபெருமானிடம் புதிதாய் அடைந்திருகிற அநுபவ நிகழ்ச்சிகளைக் கூறுகின்றார்.

187169

## சென்னையில் புதிய தேவார பாடசாலை

செங்கல்பட்டு ஜில்லா கோவூர் தேவஸ்தானத்தின் ஆதரவில், சென்னைத் தொண்டை மண்டலம் ஹைஸ்கூலுக்கு எதிரிலுள்ள சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின் சபா மண்டப மேடையில் ஒரு புதிய தேவார பாடசாலை 7-11-1932-ல் தொடங்கப்பெற்று நடந்து வருகிறது. தினந்தோறும் மாலை 6 மணி முதல் 8 மணி வரை இன்னிசையுடன் தேவாரம் கற்பிக்கப்படும். எவ்வருணத்தவரும், எவ்வயதினரும், எப்பாலரும் இலவசமாகக் கற்றுக் கொள்ளலாம். கோவூர் தேவஸ்தான தருமகருத்தர்கட்கு நமது நன்றியை மிக மகிழ்ச்சியுடன் செலுத்துகின்றோம். ஏனைய தேவஸ்தானங்களும் இந்நன்முறையைப் பின்பற்றுக.

## ஸ்ரீ ஷண்முகபக்த ஸமாஜம், சிற்றூர்

நம் சமாஜத்தோடு இணைக்கப்பெற்ற இச்சபையின் கஅ-வது ஆண்டு நவராத்திரி விழா திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்களின் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. திருவாளர்கள் C. S. ராஜாபிள்ளை, ம. பாலசுப்பிரமணிய முதலியார், J. கிருஷ்ணராவ், சிவமுத்துக்குமாரசாமி முதலியார், A. S. துரைசாமிப் பிள்ளை, க. சோமசுந்தர செட்டியார், கி. குப்புச்சாமி முதலியார், பா. கண்ணப்ப முதலியார் என்ற பேரறிஞர்கள் முறையே சுந்தரர் சரிதம், சைவ சமயம், கற்றதனாலாய பயன், நாமேன் கோவிலுக்குச் செல்லவேண்டும், இன்பநிலை, நவராத்திரி மகிமை, திருக்குறட் சாரமும் தமிழ்ச்சிறப்பும், முருகன் என்ற பொருள்கள்பற்றிச் செந்தமிழ்ச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். ஒவ்வோரிரவிலும் திரளான மக்கள் கேட்டின்புற்றனர்.

## மதிப்புரைகள்

**தேவீ மாஹாத்ம்யம்:**—மொழிபெயர்ப்பாசிரியர் நா. இராமநாத சாஸ்திரிகள் - பக்கம் - 81 - விலை அணா 8 - கிடைக்குமிடம்: ஷை ஆசிரியர், நாகேஸ்வர விலாசம், மயிலாப்பூர், சென்னை. இதில் மார்க்கண்டேய புராணத்திலுள்ள தேவியின் பராக்கிரம வரலாறு விரிவாகக் கூறப்பட்டுள்ளது. மதுகைடப மகிஷாசுர தூம்ரலோசன சண்டமுண்ட ரக்தபீஜ நிசும்பசும்பாதிகளின் வதமும் தேவீ ஸ்தோத்திரம் நாராயணீஸ்துதி முதலியனவும் இதன்கண்ணுள்ளன. தேவீ உபாசனைக்கு இன்றியமையாத நல்ல நூல். ஒவ்வொருவரும் வாங்குக.

**திருக்களர் வீரசேகர ஞானதேசிக ஸ்வாமிகள் சரிதம்:**—விலை ரூ. 1. இச்சரிதை திருக்களர் ஆண்டவர் என வழங்கிய வீரசேகர ஞானதேசிக சுவாமிகள் வரலாறு. சுவாமிகள் சீடரால் எழுதப்பெற்றது. கோவிலூர் மடத்தின் வரலாறும் சுவாமிகள் மெய்ச்சரிதையும் இதன்கண்ணுள்ளன. வேண்டுவோர் திருப்பூவண மடாதிபதிகள் காசிகாநந்த ஞானாசாரிய சுவாமிகட்கு எழுதிப் பெறுக.

**பூர்ணசக்தி, உபவாஸதத்வம், பத்திய உணவு:**—இம்மூன்று நூல்களும் புதுக்கோட்டை இயற்கை இல்லம் திரு. கி. லக்ஷ்மணசர்மா அவர்கள் இயற்றியன. இவற்றுள் மருந்தில்லாத இயற்கை முறையில் நோயற்ற வாழ்வைப்பெறும் பெற்றி தொகுத்துக் கூறப்பட்டுள்ளது. இம்முறையில் நம்பிக்கை வைத்து தீராத நோய்பல தீர்க்கப்பெற்றோர் பலர். இவை மூன்றின் விலை அணா பத்துதான். ஒவ்வொருவரும் தவறாமல் வாங்கி வாசித்துப் பயன்பெறுக.


**UNIQUE PHILOSOPHICAL WORKS**

BY D. GOPAUL CHETTY

*Late Editor, "New Reformer" Madras*

**CHIDAMBARA RAHASYAM REVEALED**

Philosophical secrets of worship at Chidambaram are here scientifically explained for the first time. Price Re. 1.

**SAIVANISM, THE RELIGION OF THE ANCIENT BRITONS**

Another first book of its kind. *The "Hindu Organ" says of this*:—"It will thus be seen that Mr. Chetty has done ample justice to the theory he advances." Price As. 8.

**பதி பசு பாச விளக்கம்**

**(தமிழ்மொழி பெயர்ப்பு)**

சைவ சித்தாந்தத்தின்படி திருச்சிறுப் பள்ளி தமிழ் வித்துவான் திருவாளர் க. மு. வேங்கடசாமி நாட்டார் கூறுவது: "தத்துவ ஆராய்ச்சி செய்யும் ஒவ்வொருவரும் அவ்வுண்மைகளைப் புதிய முறையில் வெளிப்படுத்தும் இந்நூலை வாங்கிப் படித்தலால் நல்ல பயனெய்தலாகும். இந்நூலைப் படித்தலால் என் அறிவிற்குத் தெளிவுண்டாகின்றது. (504 பக்கங்கள்) விலை ரூபா ஒன்று.

**பாம இச்சாஞான தீபிகை:**—(தமிழ்மொழி பெயர்ப்பு) விலை அணா 8.

*All these books have been universally spoken highly.*

Apply for copies to:—

**D. GOPAUL CHETTY.**
Royapettah, Madras.

Registered No. M. 2330.

"SIDDHANTHAM"
Vol. 5—No. 11.

சைவசித்தாந்த மகாசமாஜத்தில் விற்பனைக்குரிய

# புத்தகங்களின் அட்டவணை

| | ரூ. | அ. |
|---|---|---|
| சம்பந்தர் தேவாரம் (கலிக்கோ) ... ... | 1 | 0 |
| அப்பர் தேவாரம் (கலிக்கோ) ... ... | 0 | 12 |
| சுந்தரர் தேவாரம் (ராப்பர்) ... ... | 0 | 4 |
| திருவாசகம் (ராப்பர்) ... ... | 0 | 2½ |
| திருவாசகம் திருக்கோவை திருவிசைப்பா திருப்பல்லாண்டு ஆகிய அ, கூ திருமுறைகள் (கலிக்கோ) ... ... | 0 | 10 |
| தலயாத்திரைப்படம் விளக்கத்துடன் ... ... | 0 | 4 |
| ஷை வர்ணம் கொடுத்தது ... ... | 0 | 6 |
| கந்தபுராண வசனம் ... ... | 2 | 8 |
| சித்தாந்த சாத்திரம் கச (மூலம்) ... ... | 1 | 0 |
| "சித்தாந்தம்" கலிக்கோ - மலர் க, உ, ங, ச தனித்தனி ... | 2 | 0 |
| கைவல்ய நவநீதம் மூலமும் உரையும் ... ... | 1 | 8 |
| பஞ்சாக்கரமாலை மூலமும் உரையும் ... ... | 0 | 4 |
| திருமயிலை யமக அந்தாதி மூலமும் உரையும் ... | 0 | 4 |
| உமாபதி சிவம் திருமுறைத் திரட்டு ... ... | 0 | 2 |
| இயற்கைத் தத்துவ நூலும் சைவ சமயமும் ... ... | 0 | 2 |
| புலால் மறுத்தலுக்கு ஐம்பது காரணங்கள் ... ... | 0 | 2 |
| திருவெம்பாவைக் கருத்து ... ... | 0 | 2 |
| திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் சரித்திரம் ... | 0 | 2 |
| மாணிக்கவாசக சுவாமிகள் சரித்திரம் ... ... | 0 | 2 |
| சமாஜ விதிகள் ... ... | 0 | 1 |
| The Grace of Lord Siva (ஆங்கிலத்தில்) ... ... | 0 | 4 |
| திருவிழாவின் அர்த்தம் (பத்துப்பிரதிகள்) ... | 0 | 2 |
| அறுபத்துமூவர் விளக்கம் ஷை ... | 0 | 2 |
| மகிழடி சேவை விளக்கம் ஷை ... | 0 | 2 |
| தேவாரம் விளக்கம் ஷை ... | 0 | 2 |
| சமய குரவர் சம்பாஷணை ஷை ... | 0 | 2 |
| சந்தான குரவர் வரலாறு ஷை ... | 0 | 2 |
| சைவ சமயிகளுக்கு எச்சரிப்பு ஷை ... | 0 | 2 |
| திருமயிலாப்பூர் தலபுராணம் ஷை ... | 0 | 2 |
| தோத்திரத் தேவாரத்திரட்டு ஷை ... | 0 | 2 |
| சைவ சமயம் ஷை ... | 0 | 2 |

(திருவிழாவின் அர்த்தம் முதல் சைவ சமயம் வரை: ஒவ்வொன்றின் தனிப்பிரதிகள் அனுப்ப இலவசம்)

பாதிவிலையாவது முன்பணம் அனுப்பினாலன்றி வி. பி. அனுப்பப்பட மாட்டாது. தபாற்கூலி, பார்சல் செலவு, ரிஜிஸ்தர் செலவு முதலியன வாங்குவோரே செலுத்த வேண்டும். விவரங்கட்கு பின்வருமாறு எழுதுக.

சைவசித்தாந்த மகாசமாஜம்,
150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,
சென்னை.

இங்ஙனம்;
ம. பாலசுப்பிரமணியம்,
காரியதரிசி.

Printed by T. V. Volaganathan at the Sadhu Press, 13, Ganapathi Mudali Street, Royapettah and Published by M. Balasubramania Mudaliar (Editor-incharge) for the Saiva Siddhanta Maha Samajam, 150, Govindappa Naicken Street, G. T. Madras.

குறிப்பு:—உயிர்விடாது, உடம்போடு நிலைத்திருத்தல், பிராரத்த வினைப்பயன் என்று குறிப்பித்தனர். இறைவன், தகுதியிருப்பின், உடனே வீடளிக்க விருப்பமுடையன் என்ற கருத்துப்பற்றிப் 'பிரிவது திருக்குறிப்பன்று' என்றார். பாவனை, புத்தியின் பகுதி. மனம், அதனின் வேறு. எண்ணம், முத்தியை நாடவேண்டும். மனம், உலகப்பற்றொழித்தல் வேண்டும். செவி, இறைவன் அறிவுரையையே பற்றி நெஞ்சத்தை ஊக்கவேண்டும். அவற்றை அவை செய்யாமையின், பழிப்புக்குரியவாயினபோலும். ௩௭

ஏனை யாவரும் எய்திட லுற்றுமற் றின்னதென் றறி
யாத, தேனை ஆன்நெயைக் கரும்பினின் தேறலைச் சிவனை
யென் சிவலோகக், கோனை மான்அன நோக்கிதன் கூறனைக்
குறுகிலேன் நெடுங்காலம், ஊனை யானிருந் தோம்புகின்
றேன்கெடு வேன்உயி ரோயாதே.

உரை:—(அன்பரல்லாத) பிறர் யாவரும் அடைந்திட முயன்றும் இத்தன்மையனென்றறியப்படாத தேன் போல்வானைப், பசுநெய் போல்வானைக் கருப்பஞ்சாற்றின் தெளிவு போல்வானைத், தூயோனை, எனது, சிவலோகமன்னனை, மானின் பார்வையொத்த நோக்கமுடைய அம்மையை யொருபாகமுடையானை, நீண்ட காலமாக நான் அடைந்திலேன். யான் (இவ்வுலகில்) தங்கியிருந்து, தசையாலாகிய உடம்பினைப் பாதுகாத்துக்கொண்டிருக்கின்றேன். கெட்டொழிகின்றேன். பிராணன் ஒடுங்காதோ !

குறிப்பு:—சிவஞானம் பெறாது, முதல்வனை யறியக்கூடாமையின், 'இன்னதென்றறியாத' என்றார். விழைவிற்கு இன்பந்தருவதால் தேன், அறிவிற்கு இன்பந் தருவதால் ஆன் நெய், செயலுக்கு இன்பந்தருவதால் 'கரும்பின் தெளிவு' என்றார். உயிர் = பிராணன். அன - அன்னவென்பதன் குறுக்கம். ௩௮

ஓய்வி லாதன உவமனி விறந்தன ஒண்மலர்த் தாள்
தந்து, நாயி லாகிய குலத்தினுங் கடைப்படும் என்னைநன்
னெறி காட்டித், தாயி லாகிய இன்னருள் புரிந்தஎன் தலை
வனை நனிகாணேன், தீயில் வீழ்கிலேன் திண்வரை யுருள்
கிலேன் செழுங்கடல் புகுவேனே.

**உரை:**—அழிவில்லாதவனவாய், உவமிக்கப்படும் பொருள்யாவற்றையுங் கடந்தனவாய், உள்ள ஒளிமிக்க திருவடிக் கமலங்களைக் காட்டியருளி நாயென்னும் படைப்பு வகையினுங் கீழ்ப்பட்ட எனக்கு நல்ல முத்தி நெறியைக் காண்பித்துத் தாயிடமுண்டாகிய இரக்கத்தையொத்த இனிய பேரருள் புரிந்த எனது நாதனை நன்கு காணப் பெறேன். (அவன் பிரிவினை புணராமையால்) நெருப்பில் வீழ்ந்திறக்க மாட்டேன்; திண்ணிய மலை நின்று உருண்டு உயிர்விடேன்; வளமிக்க கடலிற் பாய்வேனோ. (அதுவுஞ் செய்யேன்).

**குறிப்பு:**—ஒய்வு = ஒழிவு; அழிவு. உவமன் = உவமை. குலம் - படைப்பு விசேடம். விசுவாசத்தில் நாயினுங் கீழெனக் குறிப்பார், நாயினுங் கடைப்படுமென்றார். ஆட்கொண்டபோது கண்டு, பின் காணாமையால், 'நனிகாணேன்' என்றார். ௫௧

வேனில் வேள்கணை கிழித்திட மதிசுடும் அதுதனை
நினையாதே, மானி லாவிய நோக்கியர் படிறிடை மத்திடு தயி
ராகித், தேனி லாவிய திருவருள் புரிந்தஎன் சிவன்நகர்
புகப்போகேன், ஊனில் ஆவியை ஓம்புதற் பொருட்டினும்
உண்டுடுத் திருந்தேனே.

**உரை நடை:**—மூன்றும் அடியை முதலிலும், இரண்டாமடியைப் பின்னும், முதலடியை அதன் பின்னும், நாலாம் அடியை இறுதியிலும் வைத்துப் பொருள் கொள்ளுக. தயிராகி - தயிராக.

**உரை:**—தேன் போன்ற இனிமை நிலைபெற்ற திருவருள் நல்கிய எனது இன்பனுடைய வீட்டு நகரத்தினை அடைவதற்குச் செல்லமாட்டேன். (உலகிலிருப்பின்) மான்போன்ற பார்வையுடைய மாதர் வஞ்சனையிடை, மத்தினிலகப்பட்ட தயிர்போலக் கலங்குமாறு, இளவேனிற்குரிய காமனது அம்பு நெஞ்சைப் பிளந்திட, திங்களானது உடம்பைச் சுடும். அக்கெடுதியை நினையாதே, உடம்பில் உயிரை வைத்துப்பாதுகாத்தலாகிய (சிறிய) செயலின் பொருட்டாகவே உணவுண்டு உடையுடுத்து வாழ்ந்திருந்தேனே! ஈதென்ன அறியாமை!

---

## ௫. கைம்மாறு கொடுத்தல்

[இப்பதிகம் பதில் உபகாரம் அளிக்க இயலாமை குறிக்கும் போலும்.]

இருகை யானையை ஒத்திருந் தென்உளக்
கருவை யான்கண்டி லேன்கண்ட(து) எவ்வமே
வருக வென்று பணித்தனை வானுளோர்க்
கொருவ னேகிற்றி லேன்கிற்பன் உண்ணவே.

**உரை நடை:**—வானுளோர்க் கொருவனே என்பதை முதலிற் கொள்க. ஈற்றடியில் உண்ணவேகிற்றிலேன், கிற்பன் எனமாறுக.

**உரை:**—விண்ணவர்க்கெல்லாந் தலைவனாகிய ஒருவனே! இரண்டு துதிக்கையுடைய யானையைப் போன்றிருந்து என்னுடைய உள்ளத்தின் மூலத்தை அடியேன் காணாதிருந்தேன். யான் கண்டனுபவித்ததெல்லாம் துன்பமே. (அங்ஙனமாயினும்) நீ என்னை 'வா'வென்று கட்டளையிட்டருளினை. நீ தரும் இன்பத்தை நுகர வல்லேனல்லேன். (துன்பத்தையே) நுகர வல்லேன்.

**குறிப்பு:**—இருகை என்பது அறிவு, செயல் என்ற இரண்டையுங் குறிக்கும். இருகை = இருங்கை = பெரியதுதிக்கை என்று பொருள் கொள்வாருமுளர். யானை, மதத்தால், தன்னையும் பிறரையுமறியாமை போலச் செருக்கினால், என்னை மாத்திரமன்றி உன்னையும் அறியாதிருந்தேன். 'உள்ளக்கரு' என்பதற்கு உயிர்க்குயிரெனவும் பொருள் கொள்ளலாம். உயிர்த்தோற்றத்திற்குக் காரணமாய முதல்வன் என்பது கருத்து. மனம் முதலிய கருவிகள் தோன்றுதற்குக் காரணமானவனும் அவனே. கருவென்பதற்குக் காரணம் என்றும், நடு என்றும் பொருள் உண்டு. நடு என்பது அந்தரியாமித்துவங் குறிக்குமெனக் கொண்டு, 'உளக்கருவை' என்பதற்கு உள்ளத்திற்குள்ளீடாய்க் கலந்திருப்பதை என்று பொருள் கொள்ளுவதுமுண்டு. துதிக்கையால்தடவி யறிதல், யானையின் தொழில் போலும். இறைவன்தன்மை, அறிவிலுஞ் செயலிலும் புலனாவது. அதனைக் காணாமைக்குக் காரணம் செருக்கே யென்பது கருத்து. நீ தரும் இன்பத்தை உண்ணவே கிற்றிலேன், (எவ்வத்தை) உண்ணவே கிற்பேன், என்று

**உரை:**—அழிவில்லாதவனாய், உவமிக்கப்படும் பொருள்யாவற்றையுங் கடந்தனவாய், உள்ள ஒளிமிக்க திருவடிக் கமலங்களைக் காட்டியருளி நாயென்னும் படைப்பு வகையினுங் கீழ்ப்பட்ட எனக்கு நல்ல முத்தி நெறியைக் காண்பித்துத் தாயிடமுண்டாகிய இரக்கத்தையொத்த இனிய பேரருள் புரிந்த எனது நாதனை நன்கு காணப்பெறேன். (அவன் பிரிவினை யுணராமையால்) நெருப்பில் வீழ்ந்திறக்க மாட்டேன்; திண்ணிய மலை நின்று உருண்டு உயிர்விடேன்; வளமிக்க கடலிற் பாய்வேனோ. (அதுவுஞ் செய்யேன்).

**குறிப்பு:**—ஓய்வு=ஒழிவு; அழிவு. உவமன்=உவமை. குலம் - படைப்பு விசேடம். விசுவாசத்தில் நாயினுங் கீழெனக் குறிப்பார், நாயினுங் கடைப்படுமென்றார். ஆட்கொண்டபோது கண்டு, பின் காணாமையால், 'நனிகாணேன்' என்றார். ௫௧

வேனில் வேள்கணை கிழித்திட மதிசுடும் அதுதனை நினையாதே, மானி லாவிய நோக்கியர் படிறிடை மத்திடு தயிராகித், தேனி லாவிய திருவருள் புரிந்தஎன் சிவன்நகர் புகப்போகேன், ஊனில் ஆவியை ஓம்புதற் பொருட்டினும் உண்டுடுத் திருந்தேனே.

**உரை நடை:**—மூன்றும் அடியை முதலிலும், இரண்டாமடியைப் பின்னும், முதலடியை அதன் பின்னும், நாலாம் அடியை இறுதியிலும் வைத்துப் பொருள் கொள்ளுக. தயிராகி - தயிராக.

**உரை:**—தேன் போன்ற இனிமை நிலைபெற்ற திருவருள் நல்கிய எனது இன்பனுடைய வீட்டு நகரத்தினை அடைவதற்குச் செல்லமாட்டேன். (உலகிலிருப்பின்) மான்போன்ற பார்வையுடைய மாதர் வஞ்சனையிடை, மத்தினிலகப்பட்ட தயிர்போலக் கலங்குமாறு, இளவேனிற்குரிய காமனது அம்பு நெஞ்சைப் பிளந்திட, திங்களானது உடம்பைச் சுடும். அக்கெடுதியை நினையாதே, உடம்பில் உயிரை வைத்துப்பாதுகாத்தலாகிய (சிறிய) செயலின் பொருட்டாகவே உணவுண்டு உடையுடுத்து வாழ்ந்திருந்தேனே! ஈதென்ன அறியாமை!

---

## ௫. கைம்மாறு கொடுத்தல்

[இப்பதிகம் பதில் உபகாரம் அளிக்க இயலாமை குறிக்கும் போலும்.]

இருகை யானையை ஒத்திருந் தென்உளக்
கருவை யான்கண்டி லேன்கண்ட(து) எவ்வமே
வருக வென்று பணித்தனை வானுளோர்க்
கொருவ னேகிற்றி லேன்கிற்பன் உண்ணவே.

**உரை நடை:**—வானுளோர்க் கொருவனே என்பதை முதலிற் கொள்க. ஈற்றடியில் உண்ணவேகிற்றிலேன், கிற்பன் எனமாறுக.

**உரை:**—விண்ணவர்க்கெல்லாந் தலைவனாகிய ஒருவனே! இரண்டு துதிக்கையுடைய யானையைப் போன்றிருந்து என்னுடைய உள்ளத்தின் மூலத்தை அடியேன் காணாதிருந்தேன். யான் கண்டனுபவித்ததெல்லாம் துன்பமே. (அங்ஙனமாயினும்) நீ என்னை 'வா'வென்று கட்டளையிட்டருளினை. நீ தரும் இன்பத்தை நுகர வல்லேனல்லேன். (துன்பத்தையே) நுகர வல்லேன்.

**குறிப்பு:**—இருகை என்பது அறிவு, செயல் என்ற இரண்டையுங் குறிக்கும். இருகை=இருங்கை=பெரியதுதிக்கை என்று பொருள் கொள்வாருமுளர். யானை, மதத்தால், தன்னையும் பிறரையுமறியாமை போலச் செருக்கினால், என்னை மாத்திரமன்றி உன்னையும் அறியாதிருந்தேன். 'உள்ளக்கரு' என்பதற்கு உயிர்க்குயிரெனவும் பொருள் கொள்ளலாம். உயிர்த்தோற்றத்திற்குக் காரணமாய முதல்வன் என்பது கருத்து. மனம் முதலிய கருவிகள் தோன்றுதற்குக் காரணமானவனும் அவனே. கருவென்பதற்குக் காரணம் என்றும், நடு என்றும் பொருள் உண்டு. நடு என்பது அந்தரியாமித்துவங் குறிக்குமெனக் கொண்டு, 'உளக்கருவை' என்பதற்கு உள்ளத்திற்குள்ளீடாய்க் கலந்திருப்பதை என்று பொருள் கொள்ளுவதுமுண்டு. துதிக்கையால்தடவி யறிதல், யானையின் தொழில் போலும். இறைவன் தன்மை, அறிவிலுஞ் செயலிலும் புலனாவது. அதனைக் காணாமைக்குக் காரணம் செருக்கே யென்பது கருத்து. நீ தரும் இன்பத்தை உண்ணவே கிற்றிலேன், (எவ்வத்தை) உண்ணவே கிற்பேன், என்று

பிரித்துக் கூட்டுக. அல்லது, வருக கிற்றிலேன், உலகத்துன்பத்தை உண்ணவே கிற்பேன் என்று உரைநடை கோடலு முண்டு. ௪௧

உண்டொ ரொண்பொருள் என்றுணர் வார்க்கெலாம்
பெண்டிர் ஆண்அலி என்றறி யொண்கிலை
தொண்ட னேற்குள்ள வாவந்து தோன்றினாய்
கண்டுங் கண்டிலேன் என்னகண் மாயமே.

உரை :—(உலகிற்கு முதல்வனாகிய) ஒரு அறிவொளிப் பெரும் பொருள் உண்டென்று அறிந்து உன்னை நாடுவார்களுக்கெல்லாம், நீ பெண்ணோ, ஆணோ, அலியோ, என்று உறுதியாக அறியக்கூடாம லிருக்கின்றனை. ஆனால், அடியேனுக்கு நீ உண்மையாக இருக்கின்ற வாறே தானே வந்து காட்சி கொடுத்தாய். உன் திருவருட் காட்சி பெற்றும் உன்னை அனுபவிக்கப் பெற்றிலேன். இது என்ன கண் மயக்காக இருக்கின்றது?

குறிப்பு :—இறைவன் தானே வந்து தன்னியல்புணர்த்தும்வரை, அவன் மெய்த்தன்மை உயிர்கள் தாமே அறியுந் தரத்தனவல்ல வென்றனர். அருளாசிரியனாய் வந்த இறைவனோடு உடன் செல்லாமை பற்றி 'கண்டிலேன்' என்றார். மாயம்=தந்திரம், வியப்பு, மயக்கம். உள்ளவா=உள்ள முறை. ௪௨

மேலை வானவ ரும்அறி யாததோர்
கோல மேயெனை ஆட்கொண்ட கூத்தனே
ஞால மேவிசும் பேஇவை வந்துபோங்
கால மேஉனை என்றுகொல் காண்பதே.

உரை :—மேலாகிய பதவிகளிலுள்ள கடவுளரும் அறியக்கூடாத ஒப்பற்ற திருவுருவனே! அடியேனை ஆளாகக் கொண்ட வியத்தகு செயலுடையானே, நிலவுல கானவனே, வானானவனே, (மண்ணும் விண்ணுமாய) இவைகள் தோன்றி யொடுங்குதலை வரையறுத்து நிற்குங் கால தத்துவமானவனே. உன்னை, எந்த நாள் (இனி) நான் காணுதல் கூடும்.

குறிப்பு:—மேலை=மேலாகியஇடத்திலுள்ள. இறைவன் ஆசிரிய வடிவங்கொண்டு நல்கானாயின், வானவர் அவன் மெய்த்தன்மை யறி



யார். ஆதலிற் 'கோலமே' என்றார். தன்னை ஆட்கொண்டது ஒரு விநோதமென்பார் 'கூத்தனே' என்றார். 'ஞாலமே, விசும்பே,' என்பதில் படைப்புப் பொருளனைத்து மடங்கும். கால முதலிய தத்துவங்கள் இறைவன் திருமேனியாதலின், அவையாய் அவன் இருப்பதாகக் குறிப்பித்தார். ௪௩

காண லாம்பர மேகட்(கு) இறந்ததோர்
வாள்நி லாப்பொரு ளேஇங்கொர் பார்ப்பெனப்
பாழ்ந னேன்படிற் றாக்கையை விட்டுனைப்
பூணு மாறறி யேன்புலன் போற்றியே.

உரை நடை:—'புலன் போற்றியே' என்பதைப் 'படிற்றாக் கையை' என்பதன் முன் அமைக்க.

உரை:—(அடியார்க்குக்) காணும்படியாகிய (திருவுருவங்காட்டும்) மேலான தன்மையனே, கண்ணைக் கடந்ததொரு சோதி நிலவும் (பெரும்) பொருளே, இந்நிலவுலகத்தே, (கூட்டை விட்டு வெளிப் பட அறியாத) ஒருபறவைக்குஞ்சுபோல வீணாகிய யான், ஐம்புலன்களைத் தாக்காது தடுத்து, வஞ்சவுடம்பை நீத்து, (மேற்சென்று) உன்னைப் பொருந்தும் வழியைத் தெரியாதேனாயினேன்.

குறிப்பு:—பரம்=மேன்மை. வாள்=ஒளி, அறிவு. பார்ப்பு=குஞ்சு - குட்டியெனப் பொருள் கொண்டு, குரங்குக்குட்டி தன்றாயைப் பற்றுவதுபோல உன்னை விடாதுபற்ற அறியேனென்றாரென் பாருமுளர். 'புலன்போற்றியே' என்பதற்கு ஐம்புல அவாவினை மேற்கொண்டு, எனவுங் கொள்ளலாம். பாணன்=பாழ்நன். வாழ்நன், வாணனென்றாயினாற் போல. ௪௪

போற்றி யென்றும் புரண்டும் புகழ்ந்தும்நின்(று)
ஆற்றல் மிக்கஅன் பால்அழைக் கின்றிலேன்
ஏற்று வந்தெதிர் தாமரைத் தாள்உறுங்
கூற்ற மன்னதொர் கொள்கையென் கொள்கையே.

உரை:—காத்தருள்கவென்று நினைத்தும், நிலத்தே புரண்டுவலம் வந்தும், நின்புகழ் பாடியுஞ் செய்யக்கடவனவாகிய திருத்தொண்டிலே நிலைபெற்று, திண்மை மிகுந்த பேரன்பால், உன்னைக் கூவுகின்றே

னில்லை. மாறேற்று வந்து உன்னுடைய திருவடியினை அடையும் யமன் தன்மைபோன்ற ஒரு(முரண்) குணமே எனது கோட்பாடாகும்.

குறிப்பு:—எதிர் = மாறு, பகை, நீயேவந்து யமனை உதைத்துத் திருத்திக்கொண்டதுபோலத் திருத்தப்பெறுவதே என்னியல்புக்கு ஒத்ததாம். அயராவன்பு செலுத்த கில்லேன் என்றார். ௬௫

கொள்ளுங் கில்லெனை அன்பரிற் கூய்ப்பணி
கள்ளும் வண்டும் அறுமலர்க் கொன்றையான்
உள்ளுங் கீழுமு மேலுமும் யாவுளும்
எள்ளும் எண்ணெயும் போல்நின்ற எந்தையே.

உரைநடை:—முதலடியை ஈற்றிலமைக்க. 'எனை அன்பரிற் கூய்ப்பணி கொள்ளுங்கில், என மாறுக.

உரை:—தேனும் வண்டும் நீங்காத கொன்றைப் பூவினையுடையான் எப்பொருளினுள்ளும் நடுவிலும் கீழும் மேலுமாய எப்பக்கத்தும், எள்ளிலெண்ணெய்போல வியாபித்து நின்றவனாகிய எமது அப்பன், அவனது மெய்யன்பர்போல என்னையும் வலிய அழைத்துப் பணிகொள்ளு மாற்றலுடையன்.

குறிப்பு:—பேரின்பமும் இன்பத்தை நாடும் உயிரும் தன்னை விட்டகலாத ஞாலமுதல்வன், எங்கும் நிறைந்து எல்லாம் வல்லவனாதலாலே, தகுதியற்ற என்னையும் பணிகொள்ள வல்லவன் என்றவாறு. கொள்ளுங்கில் = கொள்ள வல்லவன். ௬௬

எந்தை யாய்எம்பி ரான்மற்றும் யாவர்க்குந்
தந்தை தாய்தம்பி ரான்தனக் கஃதிலான்
முந்தி யென்னுள் புகுந்தனன் யாவருஞ்
சிந்தை யாலும் அறிவருஞ் செல்வனே.

உரைநடை:—'முந்தியென்னுள் புகுந்தனன்' என்பதை ஈற்றில் அமைக்க.

உரை:—எமது அப்பனும் அன்னையாயுமிருக்கும் எமது தலைவன் பிற எல்லார்க்குமே தாயுந் தந்தையுமாவன், தலைவனுமாவன், தனக்குத் தாய்தந்தையு மேலோனு மில்லாதவன், சொல்லாலன்றி மனத்தாலும் யாவரும் அறிதற்கரிய முத்திப் பெருஞ் செல்வனாகிய (கடவுள்) (எனக்குப் பக்குவ காலம் வரு) முன்னே என் உள்ளத்தே (பெருங் கருணையாற்) புகுந்தருளினன்.

குறிப்பு:—ஆய் = தாய். பிரான் = எஜமானன்-தலைவன். 'முந்தி' யென்றதுபோலத் திருக்கோவையாரிலும் 'என்னை முன்னாள் ஆள் உடையான்' என்றது காண்க. ௬௭

செல்வ(ம்) நல்குர வின்றிவிண் ணோர்புழுப்
புல்வ ரம்பின்றி யார்க்கும் அரும்பொருள்
எல்லை யில்கழல் கண்டும் பிரிந்தனன்
கல்வ கைமனத் தேன்பட்ட கட்டமே.

உரை:—செல்வம், வறுமையென்ற வேறுபாடில்லாமல், தேவர் புழு,புல் என்ற வரையறையில்லாமல் (செல்வர்க்கும் வறியர்க்கும் தேவராய்ப் பிறந்தார்க்கும் புழு புல் முதலியவற்றிற்கும்) எல்லார்க்கும் அறிதற்கரிய பரம்பொருளினுடைய அளவற்ற திருவடிகளைக்காணப் பெற்றும் அவற்றைப் பிரிந்திருப்பேனாயினேன். கல்லின் இனத்தினைச் சார்ந்த மனத்தினை யுடையேன், நுகரக்கிடந்த துன்பம் (எத்தன்மையது பாருங்கள்).

குறிப்பு:—எப்பிறவி யெடுப்பினும், எந்நலமெய்தினும், இறைவனை அடைவதுமாத்திரம் தனியே வேறாக வுள்ளது, எளிதிற் கிட்டத் தக்கதல்ல. இறைவனது அகண்ட அறிவுஞ் செயலுமே, 'எல்லையில் கழல்' என்னப்பட்டன. மனத்தைப் புறத்தே தோன்றுங் கல்லின், வேறாய ஒருவகைக் கல்லினாலாய தென்பார் 'கல்வகை மனத்தேன்' என்றார். ௬௮

கட்ட றுத்தெனை யாண்டுகண் ணாரநீ(று)
இட்ட அன்பரோ டியாவருங் காணவே
பட்டி மண்டபம் ஏற்றினை ஏற்றினை
எட்டி னோடிரண் டும்அறி யேனையே.

உரைநடை:—நான்காம் அடியை மூன்றும் அடியி னிறுதியிலுள்ள 'ஏற்றினை' யென்பதற்கு முன் அமைத்துக்கொள்ளுக.

உரை:—பாசங்களை ஒழித்து என்னை ஆட்கொண்டு கண்கள் பார்த்து மகிழும்படியாகத் திருநீறிட்ட பேரன்பரோடு எல்லாரும் பார்க்

கும்படியாகவே, நாயனைய என்னை (உனது திருவோலக்க) மண்டபத்தில் ஏற்றுவித்தாய், அகர உகரமாகிய சிவஞ்சத்தி யியல் பறியாதேனாகிய என்னை ஏற்றுவித்தாய் (இது நீதியோ.)

குறிப்பு :—பட்டி = நாய். 'நாய் சிவிகை யேற்றுவித்த' என்றதுங் காண்க. திருக்கோத்தும்பி (அ). பட்டி = கள்வன் என்பாருமுளர். எட்டு = அ. இரண்டு = உ. சிவர், அ + உ = ய அதாவது ஆன்மா, ஆன்ம நிலை யறியாதேனை என்றுரென்ப. இரண்டாவது ஏற்றினை = ஏறூர்ந்தவனே, ஏற்றினையுடையவனே என்பாருமுண்டு. ௪௯

அறிவ னேஅமு தேஅடி நாயினேன்
அறிவ னாகக்கொண் டோஎனை யாண்டது
அறிவி லாமையன் றேகண்ட(து) ஆண்டநாள்
அறிவ னோஅல்ல னோஅருள் ஈசனே.

உரை:—எல்லாம் அறியும் முற்றறிவினனே, சாவாமருந்தே, அடிமையாகிய நாயனையேன் (நினதுரையை) அறிய வல்லவனென்று கருதியோ, என்னை ஆட்கொண்டது? ஆண்டநாள், அறிவில்லாமையையல்லவா என்பால் நீ கண்டது. (இனி யுண்மைகள்) அறிவேனோ, அறியேனோ, ஆண்டவனே அருள் செய்யவேண்டும்.

குறிப்பு:—தனது அறிவின்மையைப் பொறுக்கவேண்டுமென்பார் இவ்வாறு கூறினர். ௫௦

---

## ௬. அனுபோக சுத்தி

[இப்பதிகம் சிவானுபவத்தின் பொருட்டு ஆன்மசுத்திசெய்தலைக் குறிக்கின்றது.]

ஈச னேயென் னெம்மானே எந்தை பெருமான் என்பிறவி
நாச னேநான் யாதுமொன் றல்லாப் பொல்லா நாயான
நீச னேனை யாண்டாய்க்கு நினைக்க மாட்டேன் கண்டாயே
தேச னேஅம் பலவனே செய்வ தொன்று மறியேனே.

உரை:—அரசனே! எனது தலைவனே, எமது அப்பனாகிய பெரியோனே, எனது பிறப்பினை யொழிப்பவனே, நான் யாதானுமொரு



சிறு பொருளுக்கு மீடாகாது தீய நாய்த்தன்மையுடைய இழிதகைமையுடையேனை ஆட்கொண்டருளிய உன்னை, (நன்றியுணர்ச்சியோடு) எண்ணித் துதிக்கமாட்டேன். அது நீ அறிந்தாயன்றே, ஒளிமேனியனே, மன்றிலாடுவானே, செய்யத்தக்கவொன்றையும் அறிகிலேன்.

குறிப்பு:—எம்மான் = தலைவன், ஒவ்வோருயிருந் தனிவேறியல்புடைமையிற் பிறிதொன்றாகாதென்ற உண்மை கருதற்பாலது. பொல்லா = திருத்தமடையமாட்டாத: அருள்பெற்ற நிலைக்கேற்றவாறு நடவாது கீழ்ப்பட்டமை கருதி, 'நீசனேன்' என்றார். நீயே அறிவொளி கொடுத்து வியத்தகு செயல் செய்து என்னை நல்வழியியக்கி உய்யக்கொள்ள வேண்டுமென்பார், 'தேசனே யம்பலவனே' என்றார். ௫௧

செய்வ தறியாச் சிறுநாயேன் செம்பொற் பாத மலர்
காணாப், பொய்யர் பெறும்பே(று) அத்தனையும் பெறுதற் குரி
யேன் பொய்யிலா, மெய்யர் வெறியார் மலர்ப்பாதம் மேவக்
கண்டுங் கேட்டிருந்தும், பொய்ய னேன்நான் உண்டுடுத்(து)
இங்கிருப்ப தானேன் போரேறே.

உரைநடை:—'போரேறே' என்பதை முதலிற்கொள்க. 'செய்வதறியா......பெறுதற்குரியேன்' என்பதை ஈற்றிற்கொள்க.

உரை:—போரில் ஆண் சிங்கத்தை யொப்பவனே, நிலையாதனவற்றிற் பற்றில்லாத உண்மை யடியார் தேன் பொருந்திய பூப்போன்ற உனது திருவடிகளைப் பொருந்தினமையைப் பார்த்தும் கேட்டிருந்தும், பொய்த்தன்மையி லீடுபட்டயான், இங்கிவ்வுலகத்தே (வயிறார) உணவுகொண்டு உடையுடுத்தி (வாளா) வாழ்ந்திருப்பேனாயினேன். (ஆதலிற்) செய்யத்தக்கன வொன்றுமறியாத கீழ்ப்பட்ட நாயனையேன், நினது செவ்விய பொன்னடிக் கமலங்களைக் காணப்பெறாத பொய் வழி நிற்பார் அடையக்கூடிய துன்பப்பேறு முழுவதையும் அடைதற்குரியேன்.

குறிப்பு:—அருளாசானோடு வந்த அடியார் அவனடி சேர்ந்தமையைக் குறிப்பித்தார். பாசப்பகையைத் தொலைக்கும் போரில், ஒப்பற்ற கடவுளாதலின், 'போரேறே' என்றார். ௫௨

போரே றேநின் பொன்னகர்வாய் நீபோந் தருளி
யிருள்நீக்கி, வாரே றிளமென் முலையாளோ டுடன்வந் தருள

அருள்பெற்ற, சீரே றடியார் நின்பாதஞ் சேரக் கண்டுங் கண்ணா கெட்ட, ஊரே ருயிங் குழல்வேனோ கொடியேன் உயிர்தான் உலவாதே.

**உரை நடை:**—' இருள்நீக்கி ' என்பதை ' அருள்' என்பதனோடு கூட்டுக.

**உரை :**—போரில் ஏறு போன்ற பெருமானே நீ (வீடாகிய) உனது அழகிய ஊரினின்றும் புறப்பட்டருளிக் கச்சை மிஞ்சிய இளமையும் மென்மையுமுடைய நகிலினளாகிய திருவருட் சத்தியோடு ஒருங்கு எழுந்தருளி, அடியர் ஆணவவிருளை யொழித்தருள, உன் திருவருள் பெற்ற சிறப்பு மிகுந்த அன்பர் நினது திருவடியை யடைதலை நேரே பார்த்திருந்தும், பார்வையற்ற ஊர்ப்பன்றிபோல, இவ்வுலகிலே திரிவேனோ, தீவினையேனது ஆயுள் முற்றி ஒழியாதோ? என்றவாறு.

**குறிப்பு:**—திருவருட் சத்தியின் துணைகொண்டே பாச நீக்கம் நிகழுதலின், அம்மையோடு எழுந்தருளினமை கூறினர். உலப்பிலாத கருணையமுதம் உயிர்களுக்கீவான் முற்படும் அருளன்னையாதலின், 'வாரேறிள மென்முலையாள் ' என்றார். அகண்ட நிலை நின்று அன்பர்க்கருள் செய்ய உருக்கோடலின் ' பொன்னகர்வாய் போந்தருளி ' என்றார். 'உயிர்' என்பது உயிர் உடலில் நிற்கும்பொழுதைச் சுட்டியது. ஈற்றடியில், ஏறு = பன்றி. ௫௩

உலவாக் காலந் தவமெய்தி உறுப்பும் வெறுத்திங் குனைக் காண்பான், பலமா முனிவர் நனிவாடப் பாவியேனைப் பணிகொண்டாய், மலமாக் குரம்பை யிதுமாய்க்க மாட்டேன் மணியே யுனைக்காண்பான், அலவா நிற்கும் அன்பிலேன் என்கொண் டெழுகேன் எம்மானே.

**உரை நடை :**—'எம்மானே' என்பதை முதலிற் கொள்க.

**உரை :**—எமது தலைவனே, அளவில்லாத காலம் நற்றவங் கிடந்து உடம்பை ஒரு பொருளாகப் போற்றாது, எடுத்த இப்பிறவியிலே உன்னைக் காணும்பொருட்டுப் பல பெரிய முனிவர்கள் மிகவும் கவலுற்றுத் தளர, (அவர்க்குப் போய் அருள்புரியாது) தீவினையேனை



ஆட்கொண்டருளினை. அழுக்கு மிகுந்த இவ்வுடலை அழித்தொழிக்க மாட்டேன், மாணிக்கமே உன்னைக் காண்பதற்குக் கவலையுற்று ஆசைப்படும் அன்பில்லாதேன்; இனி (அன்பொழிந்த) பிற எதனைக் கருவியாக்கொண்டு மேற் செல்லவல்லேன். ?

**குறிப்பு :**—குரம்பை = உடல், கூடு. அலவா நிற்றல் = கவலையுற்று ஆசைப்படுதல், அங்கலாய்த்தல், எழுகேன் = உயர்வேன். அயராவன்பே, அரன்கழல் சேர்ப்பிக்கும் என்பது குறிப்பிக்கப்பட்டது. ௫௪

மானேர் நோக்கி உமையாள் பங்கா வந்திங் காட்கொண்ட தேனே அமுதே கரும்பின் தெளிவே சிவனே தென் தில்லைக் கோனே உன் தன் திருக்குறிப்புக் கூடு வார்நின் கழல்கூட ஊனார் புழுக்கூ டிதுகாத்திங் கிருப்ப தானேன் உடையானே.

**உரை நடை :**—உடையானே என்பதைக் கோனே என்பதன் பின் சேர்க்க.

**உரை :**—மான்போன்ற விழியுடைய உமை நங்கையை (இடப்) பாகங் கொண்டவனே, (மேல் நின்று இழிந்து) இந்நிலவுலகிலே வந்து ஆட்கொண்டருளிய தேன்போன்ற கெடாத இன்பமளிப்பவனே, சாவாமருந்தே, கருப்பஞ்சாறுபோலத் தித்திப்பவனே, மங்கலப் பெருமானே, அழகிய தில்லையதிபதியே, முதல்வனே, (உன்னுடை திருவுளப்பாங்கிற் கேற்றவாறு நடந்து) வீடளிக்கும் உன் திருவுளக் குறிப்பிற் சார்ந்தவர்கள் உன் திருவடியைக் கூடவும், யான் தசை பொருந்திய புழு நிறைந்தகூடாகிய இவ்வுடம்பை இவ்வுலகத்தே வீணே காத்திருத்தலை யுடையனானேன். ௫௫

உடையா னேநின் றனையுள்கி யுள்ளம் உருகும் பெருங் காதல், உடையா ருடையாய் நின்பாதஞ் சேரக் கண்டிங்(கு) ஊர்நாயிற், கடையா னேன்நெஞ் சுருகாதேன் கல்லா மனத் தேன் கசியாதேன், முடையார் புழுக்கூ டிதுகாத்திங் கிருப்ப தாக முடித்தாயே.

**உரை :**—முதல்வனே, உன்னை முழுவதும் நினைந்து உயிர் கனியத்தக்க பேரன்புடைய அடியார்களைச் சிறப்பாக உடையவனே, அவர்கள் உன் திருவடிகூடப் பார்த்திருந்தும், ஊரில் (ஆதாரவின்றி) அலை

கின்ற நாயினுங் கீழ்ப்பட்டேன், மனமுருக வல்லேனல்லேன். உன்னை யடையும் நெறியை யறியாமனத்தினேன். அல்லது கல்லின் தன்மை யடைகின்ற நெஞ்சினேன், (அதனால் வருந்தி) அழமாட்டேன், ஆதலால், நாற்றம் நிறைந்த புழுக்கூடாய இவ்வுடம்பை நான் காத்திருப்பதே பொருத்த மெனக்கருதி அவ்வாறு முடிவு செய்து விட்டனையே.

குறிப்பு :—ஊர்நாய், திரிந்து அற்பப் பயனுவது கொள்ளும் - அதுவுமின்றி வறிதே திரிதலின், அதனினுங் கடையன் என்றார். ௫௬

முடித்த வாறும் என்றனக்கே தக்க தேமுன் னடியா
ரைப், பிடித்த வாறுஞ் சோராமற் சோர னேனிங் கொரு
த்திவாய், துடித்த வாறுந் துகிலிறையே சோர்ந்த வாறும்
முகங்குறுவேர், பொடித்த வாறு மிவையுணர்ந்து கேடென்
றனக்கே சூழ்ந்தேனே.

உரை நடை :—முதலிரண்டடியில், முன் அடியாரைச் சோமற் பிடித்தவாறும் என்றனக்கே முடித்தவாறும் தக்கதே, என அமைக்க.

உரை :—உன்னை நாடிய மெய்யடியாரை நீ தளாவிடாமற் பற்றிக்கொண்டதும் (கள்வனேனாகிய) என்னை இங்கே (உடல் காத்திருக்க) முடிவு செய்ததும் தக்கனவே, (உலகப்பற்றி லீடுபட்ட) வஞ்சனேன் இங்கே மாயா சத்தியாகிய பெண்ணின் இதழ்த்துடிப்பும், ஒரு சிறிது நேர்ந்த ஆடைக்கலைவும், முகச்சிறு வியர்வின் தோற்றமும் நிகழ்ந்த முறையில் அவற்றி லீடுபட்டு உலகவுணர்ச்சி யெய்தி எனக்கே தீங்கு இழைக்கக் கருதிக்கொண்டேன்.

குறிப்பு :—முன் = நாடிய ; முன் அடியார் - வினைத்தொகை. இறை = மிகச் சிறிய அளவு. பொடித்தல் = தோன்றுதல். துகில் = ஆடை. வாய்த்துடியாற் சொல்லும், ஆடைக் கலைவால் உடம்பும் உள்ளத்தின் நிலைகாட்டும் முகவியர்வையால், மனமும் உலக நிகழ்ச்சிகளி லழுந்தி ஈடுபட்டதெனக் குறித்தவாறும். இறைபற்றுடையார்க்கு வீடும், உலகப் பற்றுடையார்க்கு உடம்பில் நிலைப்பும் அருளியது பொருத்த மென்றார். உலக வாதனை, உயிரறிவைக் கவர்தல் கூடுமாதலின், பெண்ணின் மயல்விளை செய்கைகளின் வைத்து அதனை விளக்குவா ராயினர். இவ்வாறு கொள்ளாது, ஒருபெண்ணினைக் கண்டு அடிகள் மோகமுற்றா ரென்பது, அத்துணை பொருந்தாமை யறிக.



பெண்டிரைக் கூறுமிடத்துப் பன்மையாகக் கூறினமையும், இங்கே 'ஒருத்தி' என்றதும் உற்று நோக்குக. அவள் செயல்களை உணர்ந்தமையே கேடென்றாரே யொழிய, உணர்ந்து, பின்வேறு செயலாகிய கேடு சூழ்ந்தன ரென்னக் கருதற்க. கடவுள் ஒரு புறமும், உடம்புபற்றி நிகழும் பிராரத்தவாதனை யொருபுறமும் இழுப்பப், பின்னதை விட்டு முன்னதைப் பற்றாமையே அடிகள் தன்குற்ற மென்றாரென உய்த்துணர்க. ௫௭

தேனைப் பாலைக் கன்னலின் தெளியை யொளியைத்
தெளிந்தார்தம், ஊனை யுருக்கு முடையானை உம்பர் ஆனை வம்
பனேன், நானின் னடியேன் நீயென்னை யாண்டா யென்றால்
அடியேற்குத், தானுஞ் சிரித்தே யருளலாந் தன்மையாம்
என் றன்மையே.

உரை:—தேன்போன்ற இனிமையும் பால்போன்ற தூய்மையும் கரும்பின் சாறுபோன்ற அருட் செயலும் உடைய சோதியை அறிவின்கண் தெளிந்த அடியார்களுடைய உள்ளமே யன்றி உடம்பையும் உருகுவிக்கும், முதல்வனை (வேண்டிய தெல்லாம் எளிதின் ஈயும் விண் பசுவாகிய) காமதேனு வொப்பானை நோக்கி, வீணனேனாகிய நான் உன் அடியேன், நீ என்னை ஆட்கொண்டா யென்று செப்பினால் அடியேனைப் பார்த்து, அப்படியா, நல்லது என்று அவன் இகழ்ந்து நகையாடி யருளுதற் குரிய இயல்பே என்னியல் பாயிற்று.

குறிப்பு :—தன்னை மெய்யடியானாக இறைவன் ஏற்றுக் கொள்ளத் தகுதியில்லை யெனினும், அவன் நகையாடுவதும் தமக்கு ஒருஆறுதல் என்று குறிப்பித்தவாறு காண்க. ௫௮

தன்மை பிறரா லறியாத தலைவா பொல்லா நாயான
புன்மை யேனை ஆண்(டு) ஐயா புறமே போக விடுவாயோ
என்னை நோக்கு வார்யாரே என்நான் செய்கேன் எம்பெருமான்
பொன்னே திகழுந் திருமேனி யெந்தாய் எங்குப் புகுவேனே.

உரை :—(அன்பரன்றி) மற்றையோரா லறியப்படாத இயல்புடையதலைவனே, தீயநாய்போன்ற சிறியேனை ஆட்கொண்டு, ஐயனே, உன் அருளுக்குப் புறம்பாகச் செல்ல விட்டுவிடுவையோ, அங்ஙனமா

யின், அடியேனைக் கண்பார்ப்பார் வேறு யாவர்? எமது பெரியோனே, நான் என்னசெய்ய மாட்டுவேன்? (மாறிலாத) பொன்போல் விளங் கும் அழகிய திருவுருவ முடையவனே, எந்தையே, நான் எங்கே அடைக்கலம் புகுவேன்?

குறிப்பு:—தலைவனே, உனக்கே மீளாவடிமை. தூய அருளொளி யுடையானே பிழைபொறுப்ப துன்கடன். பெரியோனே, நீயே கண்பார்க்க வேண்டும், உனக்கே அடைக்கலம். என்று அடிகள் செப்பியவை, உருக்கத்தின் தலைநின்றவை. ருக

புகுவேன் எனதே நின்பாதம் போற்றும்அடியா ருள்நின்று
நகுவேன் பண்டு தோள்நோக்கி நாண மில்லா நாயினேன்
நெகுமன் பில்லை நினைக்காண நீயாண் டருள அடியேனுந்
தகுவ னேயென் தன்மையே எந்தாய் அந்தோ தரியேனே.

உரை நடை:—பண்டு, போற்றும் அடியாருள் நின்று நாண மில்லா நாயினேன் நகுவேன். நினைக்காண நெகுமன்பில்லை. நீ ஆண்டருள அடியேனுந் தகுவனோ. எந்தாய், என்றன்மையே, அந்தோ! தரியேன். நின்பாதம் எனதே புகுவேன்.

உரை:—நீ காட்சி கொடுத்த முன்னாளிலே, உன்னை வணங்கும் அன்பர் நடுவே நின்று வெட்கமில்லாத நாய்போன்றயான், நினது திருத்தோள்களை நோக்கி நகையாட லொன்றுமே யுடையனாயிருந் தேன். உன் திருவருட் காட்சி பெறுதற்குரிய உள்ளம் உருக்கும் அன்பு என்னிடமிருந்ததில்லை. அங்ஙனமாயின், நீ ஆட்கொண்டருளும் தகுதியுடையேன் ஆயினேனோ, எந்தையே, என்னியல்பு இருந்தவா றென்னே! ஐயா, அன்பற்ற என்னியல்பை நான் பொறுக்கமாட்டேன். நீ ஆண்டமையால், நின்பாதம், எனக்கு உரியதே. நான் அதன்கண் அடைக்கலம் புகுவேன்.

ஆற்ருமை ஆற்றுவ தொன்றனைப்பற்றும் என்பதற்கிடாக, இத்திருப்பாட்டு அமைந்திருத்தல் காண்க. க௦

---

# எ. காருண்யத்திரங்கல்

[இப்பதிகம் கருணையாலே இரங்கும்படி இறைவனை வேண்டு வதைக் குறிப்பது.]

தரிக்கிலேன் காய வாழ்க்கை சங்கரா போற்றி வான
விருத்தனே போற்றி எங்கள் விடலையே போற்றி யொப்பில்
ஒருத்தனே போற்றி உம்பர் தம்பிரான் போற்றி தில்லை
நிருத்தனே போற்றி எங்கள் நின்மலா போற்றி போற்றி.

உரை நடை:—காயவாழ்க்கை தரிக்கிலேன், எனமாறுக.

உரை:—இவ்வுடம்போடு வாழ்ந்திருத்தலைப் பொறுக்க முடிய வில்லை. சுகத்தைக் கொடுப்பவனே, காத்தருள்க. சிதாகாயத்தில் உறை யும் பழையோனே, காத்தருள்க. அடியேங்களுடைய அண்ணலே, காத்தருள்க. ஒப்பற்ற ஒருவனே, காத்தருள்க. வானவர் தலைவனே, காத்தருள்க. தில்லைமன்றில் நடமாடுவானே, காக்க. எங்கள் தூயோனே, காக்க; காக்க.

குறிப்பு:—போற்றி யென்பதற்கு வணக்கமெனவும், காக்கவென வும் பொருள் கொள்ளலாம், விடலை = ஆண்மகன். சுக

போற்றி யோ(ம்)நமச் சிவாய புயங்கனே மயங்கு கின்றேன்
போற்றி யோ(ம்)நமச் சிவாய புகலிடம் பிறிதொன் றில்லை
போற்றி யோ(ம்)நமச் சிவாய புறமெனைப் போக்கல்கண்டாய்
போற்றி யோ(ம்)நமச் சிவாய சயசய போற்றி போற்றி.

உரை:—ஓம் நமச்சிவாய. (அதாவது ஓம், சிவனுக்கு வணக்கம்.) பாம்பணிந்தவனே, அடியேன் திகைப்புறுகின்றேன். காத்தருள்க. ஓம் நமச்சிவாய, அடியேனுக்கு நின்னை யொழியத் தஞ்சமான இடம் வேறியாதுமில்லை. காத்தருள்க. ஓம் நமச்சிவாய, அடியேனைப் புறம்பே போகவிடாதே காத்திடுக, ஓம் நமச்சிவாய. காத்தருள்க, நின் வெற்றி ஓங்குக. வணக்கம், வணக்கம்.

குறிப்பு:—'நமச்சிவாய' என்பதற்கு நமச்சிவாயனே எனப் பொருள் கொள்ளுவாருமுளர். அங்ஙனமாயின், ஓ, நமச்சிவாயனே, என்று கூறுவதாகக் கருதவேண்டும். கண்டாய், அசை, போக்காதே

என்பதை வற்புறுத்துவது. இருவினையை வெல்வதால், இருமுறை வெற்றி யென்றனர். வெற்றி யிருமுறையாகவே, வணக்கமும் இருமுறையாயிற்று.

கஉ

போற்றியென் போலும் பொய்யர் தம்மைஆட் கொள்ளும் வள்ளல்
போற்றிநின் பாதம் போற்றி நாதனே போற்றி போற்றி
போற்றிநின் கருணை வெள்ளப் புதுமதுப் புவனம் நீர்தீக்
காற்றிய மானன் வான மிருசுடர்க் கடவு ளானே.

**உரை:**—என்னைப் போலும் நிலையாதவற்றிற் பற்றுடையவர்களையும் ஆட்கொண்டருளும் ஈகை மிக்க பெருந்தகையே, உனக்கு வணக்கம். உனது திருவடிக்கு வணக்கம். தலைவனே வணக்கம், வணக்கம். நிலம், நீர், நெருப்பு, காற்று, வான், உயிர், ஞாயிறு, திங்கள் என்ற இரு சுடராகிய எட்டினையும் வடிவாகக்கொண்டு அவையாகிய கடவுட்டன்மை யுடையவனே. உனது அருள் வெள்ளமாகிய புதியதேனின் பொருட்டு உனக்கு வணக்கம். (உனது அருள் வெள்ளமாகிய - புதியதேன் எம்மைக் காக்க) என்றவாறு.

குறிப்பு:—இயமானன் = உயிர். புவனம் = பிருதுவி. வள்ளல் = வரையாது கொடுப்போன். கூறிய எட்டையும், அட்டமூர்த்தமென்ப. பொய்யர்க்கும் மெய்யர்க்கும் அருள் வழங்குதலால் 'வள்ளல்' என்றார். 'நின்கருணை வெள்ளப் புதுமது போற்றி' என்பதை இறுதியிற் கொள்க.

கங

கடவுளே போற்றி யென்னைக் கண்டுகொண் டருளு போற்றி
விடவுளே உருக்கி யென்னை ஆண்டிட வேண்டும் போற்றி
உடலிது களைந்திட் டொல்லை யும்பர்தந் தருளு போற்றி
சடையுளே கங்கை வைத்த சங்கரா போற்றி போற்றி.

**உரை:**—மனம்மொழி மெய்களைக் கடந்த பெருமானே வணக்கம். அடியேனைக் கண்பார்த்து இரங்குக, வணக்கம். (உலகப்பற்றை) விடுதற்கு, என் உள்ளத்தை அன்பால் உருகுவித்து என்னை அடிமை கொண்டிட வேண்டுகிறேன், வணக்கம். இந்த உடலினை நீக்கி விரைவாக வீட்டினைக் கொடுத்தருள்க. வணக்கம். (உலகர்க்கிரங்கிக் கங்கையானது உலகை அழிக்கவொட்டாமல்) சடையின் கண்ணே கங்கையை ஏற்றமைத்துக் கொண்ட இன்பவள்ளலே, வணக்கம், வணக்கம்.